பக்கம்: எட்டு
விலை ரூபா 5.00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்
யாழ்ப்பா...
நாவாந்துறைப் படிப்பகம்

# வலம்புரி
VALAMPURI

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
**அர்ச்சனா
ஜுவலர்ஸ்**
176/1, நாவலர் வீதி,
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1931)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 தை 21 சனிக்கிழமை ( 3-02-2001 ) தொலைபேசி: 3378 ஒலி: 46

### 53-வது சுதந்திர தினம் நாளை

# யார் தடுத்தாலும் திட்டமிட்டபடி பாதயாத்திரையை நடத்துவோம்!

## ஐ. தே. க. தலைவர்கள் சூளுரை

**ஐக்கியதேசியக் கட்சியினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பாதயாத்திரை யார் தடுத்தாலும் திட்டமிட்டபடி நாளை கண்டி தலதா மாளிகையிலிருந்து ஆரம்பமாகி 9-ம் திகதி கொழும்பு மாநகரசபை மைதானத்தை வந்தடையும்- இதற்கான ஏற்பாடுகளை கட்சி மேற்கொண்டுள்ளது.**

**பாதயாத்திரையின் முடிவில் அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களையும் நடாத்துவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கட்சியின் உப தலைவர் காமினி அத்துக்கொறளை தெரிவித்துள்ளார்.**

நாளை சுதந்திர தினத்தன்று ஆரம்பிக்சப்படவிருக்கும் பாதயாத்திரை தொடர்பாக கட்சியின் உப தலைவர் காமினி அத்துக்கொறளை நேற்று பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தியிருந்தார்.

அம் மாநாட்டில் அவர் மேலும் கருத்துத் தெரிவித்திருப்பதாவது;

எம்மால் மேற்கொள்ளப்படவிருக்கும் பாதயாத்திரையை அரசு தடைசெய்ய முற்

(8-ம் பக்கம் பார்க்க)

## ஆர்ப்பாட்ட பேரணி நடத்துவோர் மனநலம் குன்றியவர்களே!

(கொழும்பு)
இலங்கையின் சுதந்திர தினத்தன்று ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தவுள்ளவர்கள் யதார்த்தத்தை உணராத மன நலம் குன்றியவர்களென பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்,

கிஸ்திரியா மனநல மருத்துவ மனையின் 75 ஆவது ஆண்டு விழாவில் பிரதம அதிதியாகக்கலந்து கொண்டு பேசிய போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசு பொருட்களின் விலையை அதிகரித்தமையைக் கண்டித்தும், அரசின் நடவடிக்கையினைக் கண்டித்தும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கண்டியிலிருந்து கொழும்புக்கு ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நாளை சுதந்திர தினத்தன்று நடத்தவுள்ளதை ஏளனம் செய்தே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (வ)

## பாதுகாப்பு ஏற்பாடுகள் இம் முறை தளர்வு

(யாழ்ப்பாணம்)
இலங்கையின் 53வதுசுதந்திர தினவைபவத்தைஒட்டி நாளை யாழ்ப்பாணத்தில் தேசியக்கொடி ஏற்றும்வைபவம் இடம்பெறவுள்ளது அன்றைய தினம் நல்லூர் கந்தசுவாமிகோவிலில் காலை ஆறுமணிமுதல் விசேடபூசை

(8-ம் பக்கம் பார்க்க)

## எரிக்சோல்வன்னிசெல்வது உடன் சாத்தியமில்லை

(கொழும்பு)
நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் உடனடியாகவன்னிசெல்லும் சாத்தியம் இல்லையென அரசியல்அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இலங்கை இனப்பிரச்சினையில் சமாதானதீர்வை ஏற்படுத்துவதில் ஈடுபட்டுள்ள எரிக்சோல் அதன்முதற்கட்டமாக அரசு-புலிகளுக்கிடையில் ஓர்உடன்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குவசதியாக இன்னும் ஒருசிலதினங்களில் நோர்வே திரும்பும் எரிக்சோல் இலண்டன்சென்று புலிகளின் அரசியல் ஆலோசகர்அன்ரன்பாலசிங்கத்தைச் சந்திப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. [ந]

## ★ பாதுகாப்புக்கருதி எரிக்சோலின்விடயத்தில் இரகசியம்பேணப்படுகிறது

(கொழும்பு)
தற்போது கொழும்பில் தங்கியிருக்கும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் தொடர்பான சகல ... வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை நேற்று முன்தினம் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரம சிங்காவை ...

## கப்பல் பயண அனுமதி இன்று வழங்கப்படும்

### துங்கத்தின்!

## இன்று வழங்கப்படும்

காங்கேசன்துறைக்கும், திருகோணமலைக்கும் இடையிலான சிற்றி ஓவ் றிங்கோ பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் 8ம், 13ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இத்தினங்களில் பயணம் செய்யவுள்ளோர் இன்று சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு ஸ்ரான்லி வீதியிலுள்ள மணிப்பம் கட்டடத்தில் இயங்கும் ரான் அலுவலகத்தில் பயண அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 6-ம் திகதி செய்வாய்க்கிழமை பயணம்செய்யவுள்ளோருக்கான பயணச்சீட்டு 5-ந் திகதி திங்கட்கிழமை வழங்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

## தங்கத்தின் விலைவீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையில் தங்கத்தின்விலை சுமார்ஆயிரத்து நாநூறுரூபாவினால் வீழ்ச்சிஅடைந்துள்ளது.

டொலரின் பெறுமதியின் தளம்பல்நிலை காரணமாக ஒருபவுண் தங்கத்தின் (24கரட்) விலை கடந்த வாரத்தில் 7ஆயிரத்து150ரூபாவாக உயர்ந்து.

தற்போது ஒருபவுண் தங்கத்தின் விலை ஐயாயிரத்து 750ரூபாவாக குறைந்துள்ளது. (ந-5)

விடயங்களும் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

எரிக்சோலின் சமாதான முயற்சிக்கு தென்னிலங்கையிலுள்ள இனவாத அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருவதனால் அவரின் பாதுகாப்புக் கருதியே இரகசியம் பேணப்படுவதாக அரசாங்க

கேம்பிறிக்பிளேஸிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து எரிச்சோல் சந்தித்தார்.

இச்சந்திப்பின் போது வேறு எவரும் இருக்கவில்லை.

இதேவேளை நேற்று எரிக்சோல் ஹெய்ம் கொழும்பில் தங்கியிருக்கவில்லையெனவும் செய்திகள் வெளியாகியுள்ளது. (ந)

## வன்னியில் குண்டு வீச்சு மக்கள் மத்தியில் பதற்றம்

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தில் ''மிக் 27 ரக'' குண்டு வீச்சுவிமானமொன்றுசரமாரியாகக் குண்டுகளை வீசித்தள்ளியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக் குண்டுத் தாக்குதல்கள் (8-ம் பக்கம் பார்க்க)

## இரட்டை கொலைச் சம்பவம் பிரதி சுகாதாரஅமைச்சர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலின் போது இரண்டு பேரைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பிரதி சுகாதார அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும் நவலோக தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

கடந்த ஒக்டோபரில் பாராளுமன்றத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் இருவரைக் கொலை செய்தமை தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சி மேல் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தது.

இம் மனுவை விசாரித்த நீதிமன்றம் கொலைச்சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் பிரதியமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோனை கைது செய்யுமாறு உத்தரவிட்டிருந்தது.

இவ் உத்தரவையடுத்தே (8-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியுடன் இன்று சந்திப்பு

(கொழும்பு)

நோர்வேயின் விசேடதூதுவர் எரிக்சோல் ஹெய்ம் மீண்டும் இன்று ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்போது அரசு புலிகளுக்குடையிலான உடன்பாடு பற்றி இறுதிமுடிவெடுக்கப் படுமென்றும்நம்பப்படுகிறது. (ந)

## கள்ள நோட்டுக் கும்பல் பொலிஸாரால் கைது 6 லட்சம் நோட்டுக்கள் மீட்பு

சட்ட விரோதமான முறையில் கள்ளரூபா நோட்டுக்களை அச்சடித்தமை தொடர்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒஸி அபயசேகரவின் சகோதரர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். இவருடன் பிரதி அமைச்சர் ஒருவரின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரும், பேராதனைப் பல்கலைக் கழக பொறியியல் பீட மாணவன் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (8ஆம் பக்கம் பார்க்க)

## தியானப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலைய இளைஞர் பிரிவினர் மாதந்தோறும் நடத்திவரும் தியானப் பயிற்சி நாளை ஞாயிறு காலை 7 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளமையால் ஆன்மீக நாட்டமுள்ள அனைவரையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-104)

## விபத்தில் காயம்

(மந்திகை)

கரவெட்டி விழுந்த ஆலடிப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற இராணுவ மோட்டார் சைக்கிள், சைக்கிள் விபத்தில் காயமடைந்த ஒருவர் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வரணி இத்தாவிலில் இருந்து இடம் பெயர்ந்து வடமராட்சியில் வசித்துவந்தவரான சுப்பிரமணியம் இலட்சுமி (வயது-52) என்பவரே காயமடைந்தவராவார். (உ-23)

## மணவாளக்கோலமும் திருவூஞ்சலும்

(யாழ்ப்பாணம்)

சுந்தர்மடம் அரசடி வீதி அருள் மிகுசெல்வநாகபூஷணி அம்பாள் ஆலயகும்பாபிஷேக தினத்தை யொட்டி காலை 108சங்காபிஷேகமும், மாலை மணவாளக் கோல திருவிழாவும் திருவூஞ்சலும் நடைபெறவுள்ளது.

நண்பகல் மகேஸ்வர பூஜையும் இடம் பெறும். (செ)

## பொதுமக்களால் சிரமம்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைத்தியர்கள் நோயாளர்களைப் பார்வையிடும் நேரத்தில் பொதுமக்கள் அங்கே டகுந்து பெரும்சிரமங்களை ஏற்படுத்தி வருவதாக கூறப்படுகிறது. (உ-23)

## நிர்வாகசபை தெரிவு

(சங்கானை)

நிற்சாமம் சரஸ்வதி சன சமூக நிலைய நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் இடம் பெற்றது

தலைவராக தி. ரமேஸ், செயலாளராகக. மாயாகரன், பொருளாளராக சி. தவசீலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (உ-ப-16)

---

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

கடந்தமாதம் 30-ம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 154218 எ | 154218 பி |
| 170104 எ | 170201 எ |
| 170258 எ | 175646 எ |
| 175646 பி | 178017 எ |
| 178017 பி | 178101 எ |
| 178101 பி | 178101 சி |
| 178311 எ | 178339 எ |
| 178339 பி | 178484 எ |
| 179399 பி | 179599 எ |
| 179855 எ | 179855 பி |
| 179877 எ | 179895 எ |
| 179895 பி | 179895 சி |
| 179897 எ | 179897 பி |
| 179897 சி | 179903 எ |
| 179903 பி | 179903 சி |
| 179903 டி | 179912 எ |
| 179918 எ | 179918 பி |
| 179918 சி | 179924 எ |
| 179954 எ | 179954 பி |
| 179954 சி | 179955 எ |
| 179956 எ | 179960 எ |
| 179997 எ | 179997 பி |
| 180023 எ | 180067 எ |
| 180072 எ | 180075 எ |
| 180076 எ | 180094 எ |
| 180094 பி | 190094 சி |
| 180094 டி | 180094 ஈ |
| 180094 எப் | 180094 ஜி |
| 180101 எ | 180101 பி |
| 180121 எ | 180169 எ |
| 180192 எ | 180192 பி |
| 180205 எ | 180255 எ |
| 180259 எ | 180295 எ |

### கோப்பாய்

| | |
|---|---|
| 172036 எ | 172036 பி |
| 172036 சி | 172036 டி |
| 178493 எ | 178493 பி |
| 179916 எ | 179916 பி |
| 179916 சி | 179958 எ |
| 180031 எ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 168858 எ | 168858 பி |
| 168858 சி | 168858 டி |
| 168858 ஈ | 170014 எ |
| 175668 எ | 178239 எ |
| 178421 எ | 178434 எ |
| 178434 பி | 178464 எ |
| 178468 எ | 178468 பி |
| 178468 சி | 178468 டி |
| 179856 எ | 179952 எ |
| 179952 பி | 179953 எ |
| 179953 பி | 179953 சி |
| 179953 டி | 179953 ஈ |
| 180009 எ | 180009 பி |
| 180091 எ | 180091 பி |
| 180107 எ | 180107 பி |
| 180107 சி | 180154 எ |
| 180154 பி | 180267 எ |
| 180267 பி | |

கடந்த மாதம் 31-ம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்ட இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 117874 பி | 173128 எ |
| 173128 பி | 175889 எ |
| 176620 எ | 176620 பி |
| 176767 எ | 176767 பி |
| 176914 எ | 178590 எ |
| 178590 பி | 178590 சி |
| 178714 எ | 178791 எ |
| 178791 பி | 178793 எ |
| 178793 பி | 178924 எ |
| 179090 எ | 179100 எ |
| 179100 பி | 179175 எ |

### நல்லூர்

| | |
|---|---|
| 178662 எ | 178716 எ |
| 178716 பி | 178716 சி |
| 178716 டி | 178717 எ |
| 178717 பி | 178783 எ |
| 178842 எ | 179020 எ |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 175965 எ | 176670 எ |
| 176670 பி | 176670 சி |
| 176670 டி | 176671 எ |
| 176671 பி | 176671 சி |
| 176875 எ | 178583 எ |
| 178685 எ | 178685 பி |
| 178687 எ | 178687 பி |
| 178687 சி | 178687 டி |
| 178699 எ | 178701 எ |
| 178867 எ | 178874 எ |
| 178874 பி | 179005 எ |
| 179006 எ | 179010 எ |
| 179070 எ | 179113 எ |
| 179135 எ | 179136 எ |
| 179160 எ | 179160 பி |
| 179239 எ | 179239 பி |
| 179239 சி | 179239 டி |
| 179278 எ | 179278 பி |
| 179285 எ | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 175949 எ | 178775 எ |
| 179264 எ | 179381 எ |
| 179381 பி | 181610 எ |
| 181610 பி | |

### உடுவில்

| | |
|---|---|
| 178652 எ | 178653 எ |
| 178787 எ | 178831 எ |
| 179030 எ | 179030 பி |
| 179030 சி | 179030 டி |
| 179030 ஈ | 179038 எ |
| 179045 எ | 179048 எ |
| 179062 எ | 179149 எ |
| 179149 பி | 179176 எ |
| 179176 பி | 179206 எ |
| 179231 எ | 179232 எ |
| 179242 எ | 179357 எ |
| 179357 பி | 179492 எ |
| 181412 எ | 181412 பி |




'இன்னுயிர் நீப்பினும் நந்தமிழ் காப்போம்"

பேராசிரியர்

அ. சண்முகதாஸ்

அவர்களின்

# மணிவிழா

இடம் : **சுப்பிரமணியம் மண்டபம்,**
பேராசிரியர் சு. வித்தியானந்தன் அரங்கு
யா- திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

காலம் : **2001-02-04 ஞாயிற்றுக்கிழமை மாலை 2-00 மணி**

**தலைவர் :திரு.திருநாவுக்கரசு கமலநாதன்**
பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
தலைவர், பேராசிரியர் அ. சண்முகதாஸ்
மணிவிழா அமைப்பு

### நிகழ்ச்சிகள்

2.00 - 2.30 மங்கள இசை ;
திரு என். கே பத்மநாதன் குழுவினர்

2.30 - 2.35 மங்கள விளக்கேற்றல் ;
திரு எஸ் சதாசிவமூர்த்தி. திரு. எஸ். சிவராசா
திரு. ஆ. மகாலிங்கம் திருமதி எஸ். ஜெயராசா

2.35 - 2.40 தமிழ் வேதம் ஓதல் :
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவிகள்

2.40 - 2.45 தமிழ்த் தாய் வாழ்த்து :

2.45 - 2.55 வரவேற்புரை :
கவிஞர் இராசையா குகதாசன் (உபதலைவர்)

2.55 - 3.03 தலைமையுரை :

3.05 - 3.15 அருளாசியுரைகள் :
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்சுவாமிகள்

3.15 - 3.25 : அருட்கவி சி. விநாசித்தம்பிப் புலவர்

3.25 - 3.35 பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன்

### வாழ்த்துரைகள்

3.35 - 3.45 திரு. க. சண்முகநாதன்
(அரசாங்க அதிபர், யாழ்மாவட்டம்)

3.45 - 3.55 பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

3.55 - 4.05 சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
(தலைவர் துர்க்கையம்மன் தேவஸ்தானம், தெல்லிப்பழை)

4.05 - 4.15 கலாநிதி என். தணிகாசலம் பிள்ளை
(மேலதிகக் கல்விப் பணிப்பாளர் யாழ்ப்பாணம்)

### விழாநாயகரைக் கௌரவித்தல்

4.15 - 4.40

செந்தமிழ்த் திலகம் விருது வழங்கல்: மணிவிழா அமைப்பு
வாழ்த்துப்பா பாடி வழங்கல் :மகாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணிஐயர்

4.40 -5.30

மலர் வெளியீடு : சண்முகதரிசனம் (இரண்டு நூல்கள்)
வெளியீட்டுரை : மூதறிஞர் வித்துவான் க. சொக்கன்
முதற் பிரதி பெறுநர் : வைத்திய கலாநிதி லயன் வை. தியாகராஜா
ஆய்வுரை : கலாநிதி சபா. ஜெயராசா
பதிலுரை : திரு. பா. தனபாலன் (மலராசியர்)
ஏற்புரை : விழாநாயகர்

### விருதினை உருவமைத்த கலைஞர் கௌரவம்

5.30 - 6.30

கலைநிகழ்ச்சிகள்
நன்றியுரை : மதுரகவி. காரை. எம். பி. அருளானந்தம்
(செயலாளர், பேராசிரியர் அ. சண்முகதாஸ்மணிவிழா அமைப்பு)

விழா மண்டபத்தில் "சண்முக தரிசனம்" இரண்டு நூல்கள் வெளியிடப்படும்.

இரு நூல்களினதும் விலை 200-00

பேரன்புமிக்க தமிழன்பர்களே!

**தமிழ் மொழியே பேராசிரியர்**
**பேராசிரியரே தமிழ்மொழி'**

தமிழ் மொழியின் மணி விழாக் காண வாரீர்
உங்கள் அனைவரையும் அன்புக் கரம் நீட்டி அழைக்கின்றோம்.

நன்றி.

திரு. தி. கமலநாதன் — தலைவர்
மதுரகவி காரை: எம். பி. அருளானந்தம் — செயலாளர்

பேராசிரியர் அ. சண்முகதாஸ் மணிவிழா அமைப்பு
யாழ்ப்பாணம்.

(கி1950)

# யுத்தச் செலவு அதிகம்; இடம்பெயர்வினால் 8 லட்சம் மக்கள் அகதிகளாயினர்

## ஆய்வு அறிக்கையில் திருக்கிடும் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த பதினேழு வருடங்களாக இடம்பெற்று வரும் யுத்தத்திற்கான நேரடிச் செலவாக 351 பில்லியன் (35100 கோடி) ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதாக ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இலங்கை தேசிய சமதானப் பேரவையும் மார்க்கா நிறுவனமும் இணைந்து நடாத்திய ''யுத்தத்திற்கான செலவுகள்'' குறித்த ஆய்வில் இம்முடிவு வெளியிடப்பட்டுள்ளது.

அந்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

அரசாங்கம் 2000 ஆம் ஆண்டு வரை யுத்தத்திற்காக 351 பில்லியன் ரூபாவை நேரடியாகச் செலவு செய்திருப்பதாகவும் பொது ஒழுங்குப் பாதுகாப்பிற்காக பல மில்லியன் ரூபாவை செலவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1982 ஆம் ஆண்டு நேரடிப் பாதுகாப்பு செலவினம் 486 மில்லியனாக காணப்பட்டதாகவும் இது 1995ல் 4.9 பில்லியனாக அதிகரித்ததாகவும் ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஆயுதக் கொள்வனவில் 66 மில்லியனாக அதிகரித்துள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் வடக்கின் உட்கட்டமைப்பை முற்று முழுதாக சிதறடித்து விட்டதாகவும், நாட்டின் அனைத்து சமூகங்களையும் சேர்ந்த 8 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களில் இரண்டு லட்சம் பேர் சிறுவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலாநிதி கோட்பினி குணதிலக்கா தலைமையில் நடைபெற்ற இவ் ஆய்வில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின்படி 11,16,000 பேர் இடம்பெயர்ந்துள்ளதாகவும் வீடு வாசல்களை, இழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தில் இதுவரை 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் பேர் வரையில் பலியாகியுள்ளனர். இவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் அப்பாவிப் பொதுமக்கள். முன்னாள் இராணுவ வீரர்களின் அமைப்புகளில் தரும் தகவல்களின் படி 10,15 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் அங்கவீனர்களாகியுள்ளனர் என்றும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## வருடாந்த மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கட்டுவன் புலம் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி ப 1 30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது

அதிபர் செ ரி.சந்திரகுமார் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு, வலிகாமம் உதவிக் கல்விப் பணிப்பாளர் ச சிவனேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (செ)

## துறைமுகம் புனரமைப்பு பொதுமக்கள் பயன்

[மண்டைதீவு]

ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் கோவிலடியிலுள்ள துறைமுகம்புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் கண்ணகை அம்மன் ஆலய வீதியும் திருத்தியமைக்கப்பட்டுள்ளது

கண்ணகை அம்மன் கோவிலடித் துறைமுகம் புனரமைப்புச்செய்ய பட்டுள்ளமையால் பொது மக்கள் சிரமமின்றி தமது பயணத்தினை மேற்கொள்ளக் கூடியதாக காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஊர்காவற்றுறை பிரதான துறைமுகம் கடற்படையினரின் பாவனையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

[செ-11]

## புதிய இடத்தில் சேவை

[யாழ்ப்பாணம்]

வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன யாழ்ப்பாணக் கிளை அலுவலகம் வாடிக்கையாளரின் நலன் கருதி வரும் 5 ஆம் திகதிதொடக்கம்கே கே எஸ் வீதியில் அமைந்துள்ள வீரசிங்கம் கட்டடத்தின் முதலாவது தளத்தில் இயங்கவுள்ளது.

(உ)

## பேராசிரியர் சண்முகதாஸ் மணிவிழா நாளை

[யாழ்ப்பாணம்]

பேராசிரியர் அ. சண்முகதாஸின் மணி விழா, நாளை ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2 00 மணிக்கு யா/ திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய சுப்பிரமணியம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி திருநாவுக்கரசு கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில், வரவேற்புரையை கவிஞர் இராசையா குகதாசன் நிகழ்த்துவார்.

அருளாசியுரைகளை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாச்சாரிய ஸ்வாமிகள், அருட்கவி சி. விநாசித்தம்பி, பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆகியோர் வழங்குவர்.

வாழ்த்துரைகளை யாழ் அரச அதிபர் க. சண்முகநாதன், யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, மேலதிக கல்விப் பணிப்பாளர் கலாநிதி எஸ். தணிகாசலம் பிள்ளை ஆகியோர் ஆற்றுவர்.

'சண்முக தரிசனம்' மலர் வெளியீட்டுரையை மூதறிஞர் வித்துவான் க. சொக்கனும், ஆய்வுரை பதிலுரைகளை கலாநிதி சபா. ஜெயராசா, மலர்ஆசிரியர் பா தனபாலன் ஆகியோர் நிகழ்த்துவர்

[உ]

## சுகாதாரம் சம்பந்தமான வீடியோப் படக்காட்சி

[கோப்பாய்]

சுகாதார நலன் பேணும் பொருட்டு, டெங்கு காய்ச்சல், வயிற்றோட்டம் சம்பந்தமான வீடியோப்படக்காட்சி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, நாவலர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் காண்பிக்கப்பட்டது.

சுகாதார பரிசோதகரின் ஏற்பாட்டில் இவ் வீடியோப் படக்காட்சி காண்பிக்கப்பட்டது.

இதே போன்று ஏனைய கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளிலும் இவ்வீடியோப் படக்காட்சி காண்பிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும் என அதிபர்கள் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

[செ-79]

## இராசி பலன்

3-02-2001
(தை 21, சனி)
தசமி ந இ 12.17 வரை
ரோகினி பி.இ 4.04 வரை
ராகுகாலம் 9.35- 11.05
சுபநேரம் 3.35- 5.05
அமிர்த்த சித்தம்.

**மேடம்**
பொருள் விரயம், வாக்குக் கலகம், காரியதாமதம், அரச நன்மை.

**இடபம்**
ஆழ்ந்த சிந்தை, நல்ல உணவு கிடைத்தல், காரிய ஜெயம், செல்வாக்கு.

**மிதுனம்**
பிரயாணம், முயற்சி தாமதம், கோபப்படுதல், குடும்பக் கவலை.

**கடகம்**
காரியம் கைகூடும், நண்பர்கள் சந்திப்பு, தனலாபம், குடும்ப சுகம்.

**சிங்கம்**
காரிய அனுகூலம், தொழில் விருத்தி, அதிகாரம், பெரி

## பெற்றோல் நிரப்பு நிலையம் விரைவில் செயற்படும்

(மண்டைதீவு)

புங்குடுதீவில் எரிபொருள் நிரப்பு நிலையத்தினை மீளவும் இயங்க வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

புங்குடுதீவு நயினா தீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்குச் சொந்தமான இவ் எரிபொருள் நிரப்புநிலையம் 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

இவ் எரிபொருள் நிலையத்தை மீளவும் செயற்பட வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் வீதி பாரிய சேதத்திற்குள்ளாகியிருந்தமையால் பெற்றோல் தாங்கியினைக் கொண்டுசெல்ல முடியாதிருந்தது.

தற்போது இவ்வீதி திருத்தம் செய்யப்பட்டுள்ளதனால் விரைவில் இவ் எரிபொருள் நிரப்பு நிலையம் செயற்படும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(செ-11)

## திருடர் கைவரிசை கைதடியில் அதிகரிப்பாம்

(கோப்பாய்)

பொதுமக்கள் பாவனைக்காய் கைதடிப் பகுதி திறந்து விடப்பட்டதன் பின் மது பொருட்கள் களவுபோகும் சம்பவங்கள் அதிகரித்து வ...

பல அடுத்தநாள் மாயமாய் மறைந்து விடுவதாகவும்,

வீடு பார்க்கவென ச்செல்லும் சிலர் தமது வீடுகளை மட்டுமன்றி அயலவரின் வீடுகளையும் பார்வையிட்டு வரு...

## சமுர்த்தி அபிவிருத்தி மன்றம் அங்குரார்ப்பணம்

(இணுவில்)

வலிகாமம் வடக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் வலி...

...வராக எஸ். சந்திரகலா செயலாளராக ரி. பிரபாகரன் உப செயலாளராக கே. பரமேஸ்வரி, பொரு...

## கைதடியில் அதிகரிப்பாம்

(கோப்பாய்)

பொதுமக்கள் பாவனைக்காய் கைதடிப் பகுதி திறந்து விடப்பட்டதன் பின் மது பொருட்கள் களவுபோகும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக அப் குதிமக்கள் தெரிவித்துள்ளனர்.

தாம்போய் முதல் நாள் பார்த்து வந்த பொருட்கள் பல அடுத்தநாள் மாயமாய் மறைந்து விடுவதாகவும்,

வீடு பார்க்கவென ச்செல்லும் சிலர் தமது வீடுகளை மட்டுமன்றி அயலவரின் வீடுகளையும் பார்வையிட்டு வருவதனாலேயேஇத்தகைய சம்பவங்கள இடம் பெறுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (உ-59)

## கொக்குவில் சந்தை புதிய இடத்திற்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு ஆடிய பாதம் வீதியில் அமைந்துள்ள பொதுச்சந்தை விரைவில் புதிய இடத்தில் இயங்கவுள்ளது. வீதிப் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக சந்தை இயங்குவதாக பொது மக்களால் நல்லூர் பிரதேச சபைக்கு சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து நல்லூர் பிரதேசசபையின் ஏற்பாட்டினாலேயே சந்தை இடம் மாற்றப்படவுள்ளது.

புதிய சந்தை குளப்பிட்டிச் சந்திக்கு அண்மையில் கே. கே. எஸ் வீதியில் விரைவில் இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-104)

## பயணிகள் நன்மை கருதி இலவச தொலைபேசி

(கொழும்பு)

பயணிகள் நன்மை கருதி கட்டுநாயக்கா விமான நிலையத்தில்இருஇலவச தொலைபேசி இணைப்புக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் இலங்கைப் பெண்கள் நாடு திரும்பும் பொழுது, விமான நிலையத்திலிருந்து கொண்டு உறவினர்களுடன் தொடர்பு கொள்ளவும், மோசடிக் காரர்களால் ஏமாற்றப்படாதிருப்பதற்குமாகவே இவ் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

பயணிகளின் வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் ஓர் அம்சமாகவே இத் தொலை பேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது: (செ)

பக கவலை.

**கடகம்**

காரியம் கைகூடும், நண்பர்கள் சந்திப்பு, தனலாபம், குடும்ப சுகம.

**சிங்கம்**

காரிய அனுகூலம், தொழில் விருத்தி, அதிகாரம், பெரியோர் ஆசி.

**கன்னி**

உடல் உழைப்பு, மதிக்கப்படாமை, மனப்பதட்டம், முயற்சி தாமதம்.

**துலாம்**

ரோகம், பிரயாணபயம், கலகம், காரிய தாமதம்.

**விருச்சிகம்**

களஸ்திர சுகம், தனவரவு, நண்பர்கள் சந்திப்பு, முயற்சி பலிதம்.

**தனுசு**

புதிய முயற்சி, பகைவர் விலகுவர், நோய் குணமடைதல், முயற்சி ஜெயம்.

**மகரம்**

உஷ்ண ரோகம், புத்திரரால் கவலை, கௌரவக் குறைவு, காரியம் தாமதம்.

**கும்பம்**

உறவினர்வெறுப்பு, கல்விச் சிறப்பு, பயந்த சுபாவம், முயற்சி மந்தம்.

**மீனம்**

பிரயாணம், காரிய அனுகூலம், அன்னியர் சந்திப்பு, வாக்கு மேன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**

## சமுர்த்தி அபிவிருத்தி மன்றம் அங்குரார்ப்பணம்

(இணுவில்)

வலிகாமம் வடக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் வலி வடக்கு பிரதேச செயலர்பிரிவில் அண்மையில் சமுர்த்தி அபிவிருத்தி மன்றம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மன்றத்தின் தலைவராக ரி. விக்னேஸ்வரன், உபதலைவராக எஸ். சந்திரகலா செயலாளராக ரி. பிரபாகரன் உப செயலாளராக கே. பரமேஸ்வரி, பொருளாளராககே. சந்தியதாரணி மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களாக எஸ். கிருஷ்ணதாஸன், எஸ். சிவா ஜினி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (உ-49)

## இலங்கையர்கள் சென்னையில் கைது

(கொழும்பு)

கள்ள நோட்டுக்களை வைத்திருந்த குற்றத்திற்காக இலங்கையர்கள் இருவர் சென்னைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய நாணயப் பெறுமதியில் ஐம்பதாயிரம் போலி ரூபாய் நோட்டுக்களை வைத்திருந்தனர் எனவும்,

இவர்கள் சென்னையில் உள்ள விடுதி ஒன்றிலேயே தங்கியிருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கைதானவர்களில் ஒருவரான முகமட் ஹசன் என்பவர் முன்னாள் இலங்கைப் பாராளுமன்ற உப்பினர் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர் (செ)

## பச்சைமிளகாய் 15ரூபா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சந்தையில் ஒரு கிலோ பச்சை மிளகாய் 15 ரூபாவாக விற்பனையாவதை அவதானிக்க முடிகிறது. (உ-104)

## மாணவர் கவனத்திற்கு

(கல்வியங்காடு)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ டிப்ளோமா வருட இறுதிப் பரீட்சை எதிர்வரும் 10 ஆம் திகதி இடம்பெறவுள்ளதால் அதற்கான அனுமதி அட்டைகளை இன்றும் நாளையும் வந்து பெற்றுக்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட மாணவர்களை திறந்த பல்கலைக்கழக பிராந்திய இயக்குநர் எஸ் எ. ஞானேந்திரன் கேட்டுள்ளார். (உ-54)

# செய்தித் துளிகள்

## மழை நீடிக்கும்

(கொழும்பு)

மழையுடன் கூடிய தற்போதைய காலநிலை இன்னும் சில தினங்கள் நீடிக்கக் கூடுமென வளிமண்டல வியல்த்திணைக் களம் அறிவித்துள்ளது.

இதன்படிவடக்கு, கிழக்கு, மற்றும் வடகிழக்கு மாகாணங்களில் அதிகமழை பெய்யக் கூடுமென்றும், ஏனையபிரதேசங்களில் இடியுடன்கூடியமழை காணப்படுமென்றும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. [ந-4]

## நூல்கள் வருகை

(மல்லாகம்)

உடுவில் பிரதேச சபைக்குட்பட்ட நூல் நிலையங்களுக்கு தற்போது பெருமளவிலான இந்திய, கொழும்பு புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் என்பன வரத் தொடங்கியுள்ளதாகவும், இதனால் வாசகர்கள் பெரும் நன்மை அடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-ப-14)

## சைக்கிள் திருட்டு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் பற்றிக்ஸ் வீதிப் பகுதியிலுள்ள இரண்டு வீடுகளில் புதனன்று இரவு சைக்கிள் திருட்டு இடம் பெற்றுள்ளது.

வீட்டில் உள்ளோர்உறங்கிக் கொண்டிருந்த சமயம் ஓடு பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் வீட்டினுள் இருந்த சைக்கிள்களை திருடிச்சென்றுள்ளனர்.

சத்தம் கேட்டு வீட்டார் எழுந்து துரத்தியபோதிலும் திருடர்கள் சைக்கிளுடன் தப்பி ஓடி விட்டதாக தெரிய வந்துள்ளது. (உ-59)

## நாயினால் வந்த கேடு

[யாழ்ப்பாணம்]

இருபாலைப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் வைத்தியசாலை உதவி நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்:

கரணவாய் பகுதியிலிருந்து கடமைக்காக யாழ். நகர் நோக்கி பிரயாணம் செய்து கொண்டிருந்த போது வீதியின் குறுக்கே நாய் சென்றதினால் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதாக தெரிய வருகின்றது.

## வீடியோ திரைப்படம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புக்கள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக்காட்சித் தொடரில் 'தமிழ் மத்திய தர சினிமாவில் கமல ஹாசன்' என்ற தலைப்பின் கீழ் நான்காவது படமாக மணிரத்தினத்தின் 'நாயகன்' எனும் திரைப்படம் இன்று மு.ப 10.00 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

ஆர்வலர்கள்எவரும் கலந்து கொள்ளலாம் எனபுறநிலைப் படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (உ)

## வீதி பாவனைக்கு

[அச்சுவேலி]

கடந்த 5 வருடகாலமாக மக்கள் போக்குவரத்திற்கு முற்றாக தடைசெய்யப்பட்டிருந்த ஆவரங்கால் கன்னாரை அம்மன் கோயில் வீதி மீண்டும் மக்கள் போக்குவரத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது.

கடந்த 95ம் ஆண்டு குடாநாட்டில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது இவ் வீதி இராணுவமண் அரண்களாலும், முட்கம்பி வேலிகளினாலும் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத அளவிற்கு தடைசெய்யப்பட்டிருந்தது.

மிகசேதமடைந்த நிலையில் காணப்பட்ட இவ் வீதி மண் இடப்பட்டு செப்பனிடப்பட்டு வருகின்றது [உ-14]

## உரிமத் தகடு வழங்கல்

(ஆவரங்கால்)

வலிகிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி, புத்தூர், உரும்பிராய், நீர்வேலி, கோப்பாய் உப அலுவலகங்கள் மூலம் நடப்பாண்டிற்கான துவிச்சக்கர வண்டி உரிமத் தகடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. (உ-57)

## அலுவலகம் திறப்பு

(சுன்னாகம்)

யா/சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலையின் புதிதாக அமைக்கப்பட்ட அதிபர் அலுவலகம் உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் அ. தற்பரானந்தனால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

# வட்டியில்லாக் கடன்களை வழங்கி வாழ்க்கைத்தரத்தை உயர்த்துக!

### மீளக்குடியேறிய மக்கள் வங்கிகளிடம் கோரிக்கை

(மல்லாகம்)

சுன்னாகம், மல்லாகம், உடுவில் பகுதிகளில் மீளக் குடியேறியுள்ள பொதுமக்கள், தமது நிலையை உணர்ந்து வட்டியில்லாக் கடன்களைத் தந்துதவ வேண்டும் என மக்கள் வங்கி சுன்னாகம் கிளை முகாமையாளரிடம் கோரிக்கை விடுத்திருப்பதாய் தெரியவந்துள்ளது.

மீளக்குடியேறி வசிக்கும் தாம் பொருளாதார நிலையில் மிகவும் பின் தங்கியிருப்பதாகவும், வீடுகள் உடைவுற்றும், சிதைவுற்றும் காணப்படுவதால் அவற்றைத் திருத்தியமைப்பதற்கும் பணம் தேவைப்படுவதால் அதனை கடனடிப்படையில் வட்டியில்லாது வழங்க வேண்டும் எனவும், அப்பணத்தைத் திருப்பிச் செலுத்தும் கால எல்லையை நீடிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, மக்களுடைய இக்கோரிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட வங்கி சில சாதகமான உடன்பாடுகளுக்கு வந்திருப்பதாகவும் தெரிய வருகிறது. (உ-ப-14)

## லண்டனில் சமாதான எழுச்சி நிகழ்வு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னணிஅமைப்பினால் லண்டன் மாநகரில் இலங்கையில் சமாதானம் எனும் பெயரில் எழுச்சி நிகழ்வொன்றுநடத்தப்பட்டது.

கடந்த மாதம் 22ந் திகதி நடத்தப்பட்ட இவ்எழுச்சி நிகழ்வுக்கு பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தலைமைதாங்கினார்.

அத்துடன அதிதிகளாக இவ்விழாவில் பல பாராளுமன்றஉறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினரின் அலுவலகமொன்றில் மேற்படி நிகழ்வு இடம்பெற்றது.

இதே சமயம் மேற்படி விழாவில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்காளர் தொகுதியில் பெருமளவான தமிழ்வாக்காளர்கள் வசிப்பதனால் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களின் வாக்குகளைப் பெற புலிகள் அமைப்பைத் தடை செய்ய வேண்டாமென்று பிரித்தானிய அரசை வற்புறுத்தக் கூடுமென்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## பிரிட்டிஷ், இந்தியா விசாக் கட்டணம் உயர்வு

(கொழும்பு)

பிரிட்டனுக்கான விசாக் கட்டணம நேற்று முன்தினம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது

கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகம் இந்த விசா அதிகரிப்பு அறிவிப்பு சம்பந்தமான செய்தியை வெளியிட்டுள்ளது.

இந்த விசா அதிகரிப்பு மாணவர்களுக்கும் மற்றும் சாதாரண விசாவுக்குமான கட்டணம் 4,125 ரூபாவில் இருந்து 4,445 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. பிரிட்டனுக்கு குடிபெயர்வோருக்கான கட்டணமும் 32,400 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தியத் தூதரகமும் தனது விசாக் கட்டணத்தை நேற்று முன் தினம்முதல்அதிகரித்துள்ளது.

உல்லாசப் பயணம், வர்த்தக நோக்கங்களுக்கான இந்திய விசாக்கட்டணம் 240 ரூபாவில் இருந்து 270 ரூபாவாக உயர்த்தப்பட்டுளது. (வ)

## இடம்பெயர்ந்தோர் கொடுப்பனவு இம்மாதம்

(அச்சுவேலி)

தென்மராட்சியில் இருந்தும், கோப்பாய் பிரதேச செயலர்பிரிவில் இடம்பெயர்ந்ததாக அறிவிக்கப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்தும் இடம்பெயர்ந்து கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குள் வசிப்பவர்களுக்கான இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு இம்மாதம் 15 ஆம் திகதி வியாழக்கிழமை மேற்படி பிரதேச செயலகத்தில் வைத்து வழமைபோல் மக்கள் வங்கியினரால் வழங்கப்படவுள்ளது.

இதுவரை பெயர்கள் அறிவிக்கப்பட்டு கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் தமக்குரிய கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு பெயர் இருப்பதை உறுதி செய்துகொண்டு தேசிய விசேட அடையாள அட்டை உலர்உணவு அட்டை ஆகியவற்றுடன் அன்றைய தினம் வரும்படி கோப்பாய் பிரதேச செயலர் கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

இதேவேளை, இடம்பெயர்ந்து கொடுப்பனவுக்காக பதிவு செய்து இதுவரை பெயர்கள் அறிவிக்கப்படாதவர்கள் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளும்படியும் கேட்கப்பட்டுள்ளது. (உ-14)

## ஏற்புவலி மருந்துக்கு தட்டுப்பாடு; ஆடுகள் பலி

(ஆவரங்கால்)

வலிகிழக்குப் பிரதேச மிருக வைத்திய சாலையில் நிலவும் ஏற்புவலித் தடுப்பு மருந்து தட்டுப்பாட்டின் காரணமாக பெருந்தொகையான ஆடுகள் ஏற்புவலியால் மரணமடைந்திருப்பதாக மேற்படி வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டின் இறுதிப் ... இருந்த போதிலும், மருந்து அனுப்பிவைக்கப்படுவதில் காட்டுகின்ற அசிரத்தைப் போக்கே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

இதேசமயம்,

கடந்த வருடம் 5 ஏற்புத் தடுப்பு மருந்துகள் மாத்திரமே இவ் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-57)

## வீதி திருத்தம்

(மல்லாகம்)

நீண்ட நாட்களாக திருத்தப்படாது, பாவனைக்குதவாது காணப்பட்ட உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதான வீதி மிகவும் நேர்த்தியாக செப்பனிடப்பட்டுள்ளது. (உ-ப-14)

பெற்றுள்ளனர்.

கரணவாய் பகுதியிலிருந்து கடமைக்காக யாழ். நகர் நோக்கி பிரயாணம் செய்து கொண்டிருந்த போது வீதியின் குறுக்கே நாய் சென்றதினால் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதாக தெரிய வருகின்றது.

உதவி நிர்வாக உத்தியோகத்தர் க. நாகலிங்கம் (வயது -60) பாதுகாப்பு உத்தியோகத்தர் ம. சத்தியநாதன் (வயது-50) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

(உ-12)

## பஸ் நிலைய பகுதியில் வெள்ளம்

(சுன்னாகம்)

மல்லாகம் பஸ்நிலையப் பகுதிகளில் காணப்படும் பள்ளங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

பஸ் புறப்படும் வேளைகளில் வெள்ளம் தம்மீது அடித்து விடாமல் இருப்பதற்காக பயணிகள் அங்கும் இங்கும் ஓடி தமது பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதனையும் அவதானிக்க முடிகிறது.

(உ-25)

## பயணிகள் தரிப்பிடம்

கே. கே. எஸ் வீதிப்பகுதியில் உள்ள நாச்சிமார் கோவிலடியிலும் பூநாறிமடச் சந்தியிலும் புதிதாக பயணிகள் தரிப்பிடம் அமைக்கப்பட்டு வருகிறது. (உ-ப-14)

(சுன்னாகம்)

யா/சுன்னாகம் திருஞான சம்பந்த வித்தியாசாலையின் புதிதாக அமைக்கப்பட்ட அதிபர் அலுவலகம் உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் அ. தற்பரானந்தனால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

(உ-25)

## குப்பிவிளக்கு விபரீதம்

(யாழ்ப்பாணம்)

குப்பிவிளக்கு பாவிப்பதால் ஏற்படும் விபரீதம் எனும் தலைப்பில் மாவட்டத் தொழிற்சாலை பரிசோதனைப் பொறியியலாளர் அலுவலகம் துண்டுப் பிரசுரம் ஒன்றினை பொதுமக்கள் நலன்கருதி வெளியிட்டுள்ளது.

(உ)

## புகையிலைச் செய்கை பாதிப்பு

(கல்வயல்)

யாழ். குடாநாட்டின் புகையிலை உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி, பச்சிலைப் பள்ளிப் பகுதிமக்கள் இடம் பெயர்ந்துள்ளமையாலும் வடமராட்சிப் பகுதியிலும், தீவுப்பகுதியிலும் புகையிலைச் செய்கை மேற்கொள்ளப்பட்ட போதும் அவைகளில் குருமன், வெண்மை நோய்களின் தாக்கத்தால் புகையிலை உற்பத்தி பாதிப்படைந்துள்ளது. (செ-111)

மிருக வைத்திய சாலையில் நிலவும் ஏற்புவலித் தடுப்பு மருந்து தட்டுப்பாட்டின் காரணமாக பெருந்தொகையான ஆடுகள் ஏற்புவலியால் மரணமடைந்திருப்பதாக மேற்படி வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் இருந்து இற்றை வரையில், கருத்தரித்த பல ஆடுகள் இந்நோயினால் மரணமடைந்துள்ளன

இதனால் ஆடுகளின் இனப் பெருக்கம் மிகவும் வீழ்ச்சி நிலையைக் கண்டுள்ளது.

மேற்படி மிருக வைத்திய சாலையில் ஏற்புவலித் தடை மருந்தினை களஞ்சியப்படுத்தக் கூடிய குளிர்சாதன வசதி காட்டுகின்ற அசிரத்தைப் போக்கே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

இதேசமயம்,

கடந்த வருடம் 5 ஏற்புத் தடுப்பு மருந்துகள் மாத்திரமே இவ் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-57)

## கட்டாக் காலிகளால் தொல்லை

(அச்சுவேலி)

அச்சுவேலி தெற்குப் பகுதி நெல் வயல்களில் கட்டாக் காலி மாடுகள் அத்துமீறி நுழைந்து பயிர்களை நாசம் செய்து வருவதாக பாதிக்கப்படும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இரவுவேளைகளை விடப் பகல் வேளைகளிலேயே இவற்றின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவது குறிப்பிடத் தக்கது. (உ-14)

## ஓய்வு பெறுகிறார்

(சுன்னாகம்)

யாழ். சுன்னாகம்திருஞான சம்பந்த வித்தியாசாலை அதிபர் வி. ஏரம்பமூர்த்தி தனது பணியில் இருந்து ஓய்வு பெறவுள்ளார். (உ-25)

(மல்லாகம்)

நீண்ட நாட்களாக திருத்தப்படாது, பாவனைக்குதவாது காணப்பட்ட உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதான வீதி மிகவும் நேர்த்தியாக செப்பனிடப்பட்டுள்ளது. (உ-ப-14)

# வெங்காயப் பயிரில் நோய்த்தாக்கம்

### விரக்திநிலையில் விவசாயிகள்

(அச்சுவேலி)

அண்மைய சில நாட்களாக யாழ். குடாநாட்டில் பெய்து வரும் மழை காரணமாக வெங்காயப் பயிரில் பல்வேறு நோய்த்தாக்கங்கள் திடீரென ஏற்பட்டுள்ளன.

தற்போதைய மழையினால் வெங்காயப் பயிரில் கூழா நோய் மற்றும் தாள் ஒடிவு நோய் போன்றன திடீரென ஏற்பட்டிருப்பதனால் வெங்காயத்தின் விளைச்சல் குன்றிய நிலையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பாரிய அளவில் முதலீடு செய்து வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பாரிய நஷ்டத்தினை எதிர்நோக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. (உ-14)

# பதிவு செய்யப்பட்ட வி. க. இடையிலான எல்லே சுற்றுப் போட்டி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான போட்டி நிகழ்வுகளில் இன்று எல்லே சுற்றுப் போட்டி நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் இளந்தென்றல் விளையாட்டுக் கழகம் அண்ணா முன்னேற்ற விளையாட்டுக் கழகம், அருணோதய விளையாட்டுக் கழகம், சோலையான் விளையாட்டுக் கழகம், அண்ணா விளையாட்டுக் கழகம், மகாமாரி விளையாட்டுக் கழகம், இருதயராஜா விளையாட்டுக் கழகம், காந்திஜி விளையாட்டுக் கழகம் ஆகிய விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றவுள்ளன.

(செ-75)

## இன்று ஒரு தகவல்

### கூலிவேலையாள் கதாசிரியர்

செம்பட்டைமயிர், நீலக் கண்கள், வளைந்த புருவங்கள், பெரியவாய், கூர்ந்த பதி, இத்தனையுமுள்ள அழகான சிறுவன் அவன். ஒரு தொழிற்சாலையிலே கூலியாக வேலை செய்து கொண்டிருந்தான் அந்தத் தொழிற்சாலை மிகவும் சிறியது. இருட்டு அறை, எங்கும் எலிகள் வசித்தன. அவ்வளவு அழுக்கு நிறைந்த இடம். அங்கு சப்பாத்துக்குப் பூசும் மை தயாரித்தார்கள். அந்த மை நிறைந்த போத்தல்களில் காகிதம் சுற்றி விளம்பரம் ஒட்டுவது அவனுடைய வேலை. அந்த வேலையை அவன் மிகவும் சுறுசுறுப்பாகச் செய்வான். அவன் அவ்வேலையை விரைவாகச் செய்வதைக் காண ஜன்னலோரம் மக்கள் கூடுவார்கள். அவனுடைய கைகளும், உடலும் தான் அத்தொழிற்சாலைக்குள்ளேயிருந்தன மனம் வேறோர் இடத்திலிருந்தது. அந்த வேலையைச் செய்வதற்கே அவன் துக்கப்பட்டான். வறுமையினால் துன்புற்றான். இந்த வேலையை விட்டாலும் வேறு கதி இல்லை.

அவனுடைய தாயும், தந்தையும் பரம ஏழைகள் வாங்கிய கடனைச் செலுத்தத் தவறியதற்காகத் தந்தை சிறைத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்தார். அந்தக் காலத்தில் இங்கிலாந்து தேசத்தில் ஒரு வழக்கம் இருந்தது ஒரு சிறு கூலியைச் செலுத்தினால் ஒரு கைதியின் குடும்பமும் அவனுடன் சிறைச்சாலையில் வசிக்கலாம். ஏழைத்தாய் அக் கூலியைக் கொடுத்துத் தன் பிள்ளைகளுடன் சிறையில் வசித்தாள். சிறையில் வாடிய அந்தக் குடும்பத்தின் பிள்ளைகளுள் அவன் மட்டுமே உழைத்தான். அதுவும் அந்தச் சின்னஞ்சிறு வயதில் ஒரு தொழிற்சாலைக் கூலியாக உழைத்தான். சம்பளம் நாளொன்றிற்கு முப்பத்திரண்டு சதங்களே;

ஞாயிற்றுக்கிழமை விடுமுறைக்கு அவன் பெற்றோருடன் வாழச் சிறைச்சாலைக்குச் சென்று விடுவான். அவன் தினசரி ஒரு கோப்பை பாலும், வெறும் பாணுமே சாப்பிட்டான். அவனுடைய தந்தைக்குத் திடீரென நல்ல காலம் பிறந்தது. அவனுடைய தூரத்து உறவினர் ஒருவர் செத்துப் போனார். அவருடைய சொத்துக்களின் ஒருபகுதி தந்தையைச் சேர்ந்தது. கடனைக் கொடுத்துச் சிறையிலிருந்து மீண்டார். அதே காலத்தில் அவனுக்குத் தொழிற்சாலையிலிருந்த வேலையும் இல்லாது போய்விட்டது. இப்பொழுது தந்தையிடம் கொஞ்சம் பணம் இருந்தது. இதனால் அவன் தான் படிக்கப் போவதாகக் கூறினான். தந்தையும் அவனைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தார்.

அந்தப் பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியர் மகா கொடியவர். எந்த நேரமும் எதற்கும் மாணவர்களைத் தண்டிப்பார். அவர் உபயோகித்த பிரம்பு கத்தியைப் போன்றதாம். அவன் அங்கு இரண்டு வருடங்களே படித்தான். தொடர்ந்து படிக்க முடியவில்லை. தந்தை பெரிய செலவாளி சொத்துக்கள் கரைந்து விட்டன. இதனால் அவன் மீண்டும் வேலை தேடி அலைந்தான். இப்பொழுது கொஞ்சம் படித்திருந்ததினால் வாரம் ஒன்றுக்கு பத்துருபா சம்பளத்தில் வேலை கிடைத்தது. அந்த வேலையிலிருக்கும் பொழுது நிறைய நிறையக் கதைப்புத்தகங்களை வாசித்தான்.

தொழிற்சாலையில் வேலை செய்த பொழுதும், பாடசாலையிற் படித்த பொழுதும் அவனுடைய மனம் கற்பனைகளில் . மிதக்கும். இந்தக் கற்பனைகளின் பயனாக அவன் பிற்காலத்தில் சிறந்த நாவலாசிரியனாகத் திகழ்ந்தான். ஆங்கிலம் உலகின் பல பாகங்களிலும் பேசப்படுவதால் உலகமொழி என்ற நிலையைப் பெற்றுள்ளது. அம்மொழியிலுள்ள இலக்கியத்தை எத்தனையோ எழுத்தாளர்கள் வளப்படுத்தியிருக்கிறார்கள். அப்படி வளப்படுத்தியவர்களுள் ஒருவர் சாள்ஸ்டிக்கன்ஸ் என்பவர். அவர் எழுதிய நாவல்கள் உலகப் பிரசித்தி பெற்றவை. அத்தகைய நாவல்களை எழுதிய இவர்தான், இளமைப்பருவத்திலே முப்பத்திரெண்டுசதங்களுக்காகக் கூலி வேலை செய்தவர்.

நன்றி இளமைப்பருவத்திலே

# வடமராட்சி தொ. பே. உரிமையாளர் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு

(மந்திகை)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட தொலைபேசி உரிமையாளர்களது தொலைபேசி அமைவிடத்திற்கான வரி அவர்களது வருமானத்திற்கேற்ப தீர்மானிக்கப்படும் என சம்பந்தப்பட்ட பிரதேசசபை செயலாளர் பசுபதி தெரிவித்துள்ளார்.

வடமராட்சி தொலைபேசி உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் நடத்திய சந்திப்பின்போது அவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அச்சந்திப்பின் போது,

1999 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பு வரியாக ஆயிரம் ரூபா செலுத்தியவர்கள (மோட்டோரோலர்) அதனைச்செலுத்தி முடிக்கவேண்டும்.

கூடுதலான வருமானத்தைப் பெறும் தொலைபேசி உரிமையாளர்கள் 500 ரூபாவும் நடுத்தர வருமானம் பெறுபவர்கள் 300 ரூபாவும் மிகக்குறைவான வருமானம் பெறுபவர்கள் 200 ரூபாவும் செலுத்தவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன்,

தொலைபேசி சேவையை வர்த்தக நோக்கமாக கொண்டவர்களுக்கு மாத்திரமே இது பொருந்தும்.

அரச திணைக்களங்கள் கேபிள் உரிமையாளர்கள் வரி செலுத்த வேண்டியதில்லை:

இதேவேளை,

தமது பிரச்சினைகளை விளக்கிவடமராட்சி தொலைபேசி உரிமையாளர் சங்கம் மேற்படி பிரதேச சபைக்கு அண்மையில் மகஜர் ஒன்றினை அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது (உ-23)

## உதைபந்தாட்டம்

(சுண்டுக்குளி)

சென்ற ஆண்டில் நடத்தப்பட்டு நாட்டுநிலை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்ட 22 வயதுக்கு உட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் மீண்டும் நாளை 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளன,

நாளைய தினம் பி ப 3. 30 மணிக்கு அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகமும்.

பி. ப. 4. 30 மணிக்கு குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்றோக்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன:

(உ-110)

## படிப்பகம் இயங்குகிறது

(கல்வியங்காடு)

கல்வியங்காடு வன்னியசிங்கம் படிப்பகம் நீண்டகால இடைவெளியின் பின் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது.

(உ-54)

## சமரசமாக வாருங்கள் இந்துநாளேடு வலியுறுத்து

(கொழும்பு)

அதிகாரப் பகிர்வு உட்பட தீர்வு யோசனைகள் தொடர்பாக மீண்டும் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க பிரதான அரசியல் கட்சிகள் முன் வர வேண்டும்.

இவ்வாறு இந்து நாளேடு தனது ஆசிரியத் தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உளவியல் சச்சரவு புதியதோர் கட்டத்தை அடைந்துள்ளது.

இரு தரப்பினருக்கும் இடையிலான நீண்டகாலப் போர் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள நாணயமிதப்பு, பொருட்கள் விலை உயர்வு ஆகியன மக்கள் மத்தியில் பலத்த விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவும் இந்து பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(செ)

## காவலரண் அமைப்பு

கந்தரோடை சின்னக்களத்தடியில் இராணுவத்தினரால் புதிதாக காவலரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.(ப-14

## பெறுமதிமிக்க பொருட்கள் கிழுவானையில் திருட்டு

(கோப்பாய்)

கோப்பாய்ப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

அண்மையில் கோப்பாய் கிழுவானை ஒ ங்கைப் பகுதியில் உள்ள வீடொன்றில் இரவு வேளையில் உட்புகுந்த திருட்டுக்கும்பல், அங்கிருந்த பெறுமதி மிக்க வானொலிப் பெட்டி,மின் அழுத்தி, ஒரு தொகைப்பணம என்பவற்றுடன் சேட் பொக்கற்றினுள் இருந்த அடையாள அட்டைகளையும் திருடிச் சென்றுள்ளனர்.

இத் திருட்டுச் சம்பவம் பற்றி கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(செ-79)

## இளைஞர் யுவதிகளுக்கு ஆங்கில மொழிப்பயிற்சி

(ஊர்காவற்றுறை)

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட அலுவலகம் ஊர்காவற்றுறை இளைஞர் கழகங்களின் பிரதேச சம்மேளனத்தினூடாக ஆங்கில மொழிப்பயிற்சி ஒன்றினை மேற்படி பகுதி இளைஞர்,யுவதிகளிடையே நடத்தத்திட்டமிடப்பட்டுள்ளது.

இலவசமாக நடத்தப்படவுள்ள இப்பயிற்சி நெறியில் பங்கு கொள்ள விரும்பும் 15 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்டவர்கள், ஊர்காவற்றுறை இளைஞர் கழக பிரதேச சம்மேளனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(உ-75)

## கூ. மொ. விற்பனை நிலைய செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

## கொல்களம் இயங்குகிறது

## ஊர்காவற்றுறையில் வேலைத்திட்டங்கள்

தந்தைக்குத் திடீரென நல்ல **நன்றி இளமைப்பருவத்திலே**

சிங்கம் படிப்பகம் நீண்ட கால இடைவெளியின் பின் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது.

(உ-54)

ஆங்கில மொழிப்பயிற்சி ஒன்றினை மேற்படி பகுதி இளைஞர், யுவதிகளிடையே நடத்தத்திட்டமிடப்பட்டுள்ளது.

கழக பிரதேச சம்மேளனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(உ-75)

# கூ. மொ. விற்பனை நிலைய செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

## கையிருப்பு தீர்ந்ததாம்

(அச்சுவேலி)

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களின் கையிருப்பில் இருந்த விற்பனைப் பொருட்கள் விற்பனை செய்து முடிவடைந்து இருப்பதனால் இந் நிறுவனங்களில் செயற்பாடுகள பெருமளவில் ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் காணப்படுகின்றன.

பொதுமக்களின் நன்மை கருதி கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட இந் நிறுவனங்களில் கடந்த வருட பிற்பகுதியிலேயே கூடுதலான விற்பனைப் பொருட்கள் விற்று தீர்ந்த நிலையில் நிறுவன வியாபார நடவடிக்கைகள் மந்த கதியிலே இடம்பெற்று வந்துள்ளன.

இதேவேளை, யாழ். குடாநாட்டில் இயங்கும் இந் நிறுவனங்களுக்கு கடந்த வருட முற்பகுதியில் இருந்து எவ்வித பொருட்களும் அனுப்பிவைக்கப்படாததனாலேயே இந் நிலை ஏற்பட்டுள்ளதாய் தெரியவந்துள்ளது.

இதேசமயம்,

நாட்டின் ஏனைய பகுதிகளில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் மக்களின் நன்மை கருதி விலைகுறைத்து பொருட்களை விநியோகம் செய்துவருவது குறிப்பிடத்தக்கது. (உ-14)

# மானிப்பாய் இந்துவில் கணித விஞ்ஞானபிரிவுகள்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி இந்துக்கல்லூரி உயர்தர கணித விஞ்ஞான பிரிவுகள் நேற்று முன்தினம் முதல் மானிப்பாய் இந்துக் கல்லூரியில்இயங்க ஆரம்பித்துள்ளன.

ஆய்வுகூட வசதி கருதியே இம்மாணவர்கள் இங்கேகல்வியைத் தொடர ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாய் தெரியவந்துள்ளது.

இதேவேளை, சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் ஏனைய வகுப்புகள் வழமை போல் இணுவில் மத்திய கல்லூரியில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (உ-12)

# கொல்களம் இயங்குகிறது

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் பிரதேச சபையினால் அமைக்கப்பட்ட கொல்களம் கடந்த 31 ஆம் திகதி முதல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

ஊர்காவற்றுறைப் பகுதி பொதுச்சுகாதார பரிசோதகரினால் உறுதிப்படுத்தப்பட்டபின் இங்கு இறைச்சிக்காக ஆடு மாடுகள் வெட்டப்படுகின்றன. (உ-75)

# விளையாட்டு போட்டி

(சுன்னாகம்)

யா/மல்லாகம் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பி. ப. 1.30 மணியளவில் அதிபர் மா. நாகேந்திரசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-25)

# அடிக்கல் நாட்டுவிழா

(வட்டுக்கோட்டை)

அராலி ஆவரம்பிட்டி முத்து மாரியம்பாள் ஆலயத்திற்கு புதிய வசந்தமண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா இன்று நடைபெறவுள்ளது. (செ-24)

## ஊர்காவற்றுறையில்

# வேலைத்திட்டங்கள் பல முன்னெடுப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில். இவ்வருடம் ஒதுக்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான 12 இலட்சம் ரூபாமூலதன நன்கொடை மூலம் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த வகையில், காரைநகர் விக்காவில் சலவைக் குளம், சாம்பலோடை நீர்த் தடுப்பணை, சேரிக்குடியிருப்புகளுக்கு மலசலகூடம் நாரந்தனை பொதுச்சந்தை வீதி புனரமைப்பு, திக்கரை கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம் ஆகியன அமைக்கும் பணிகள் இடம்பெறவுள்ளன.

(உ-75)

# இடம்பெயர்ந்தமக்களுக்கு 3 மில்லியன் கடனுதவி

(மல்லாகம்)

சென்ற வருடம் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களினால் இடம் பெயர்ந்து வலிதெற்கு பிரதேச சபைப்பிரிவில் வசிப்பவர்களுக்கு, இலங்கை வங்கியின் சுன்னாகம் கிளையினால் 3 மில்லியன் ரூபா கடனுதவிகள் வழங்கப்பட்டிருப்பதாக வங்கியின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வழங்கப்பட்ட கடனுதவிகள் மூலம் சம்பந்தப்பட்ட பொதுமக்கள் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொண்டு பயனுடையதாக இவ் உதவிகளை மாற்றியமைத்தனர் எனவும்,

இனிவரும் காலங்களில் வங்கியின் செயற்பாடுகள் விரிவுபடுத்தப்படுவதுடன், வேலையற்றிருக்கும் இளைஞர் மத்தியில் வேலைத் திட்டங்களை உருவாக்க வல்ல செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் திட்டங்களை மேற்கொண்டு வருவதாகவும் அவ் உயர் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-ப-14)

அஸாமில் பாதுகாப்பு படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் ஒரு இராணுவ வீரரும், மூன்று உல்பா தீவிரவாதிகளும் கொல்லப்பட்டுள்ளனர்.

இப்பகுதியிலிருந்து சிறிய அளவிலான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளது. [செ]

புரண்டியர் போஸ்ட்டில் மேற்படி கடிதம் வெளியிடப்பட்டதை அடுத்து பத்திரிகை அலுவலகம் பாகிஸ்தான் அதிகாரிகளினால் உடனடியாக மூடப்பட்டதும் அங்கிருந்த ஆறுபேர் கைது செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்திற்கு பின்

70 பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் உள்ள 110 வயதுடைய சவுதி அரேபியாவை சேர்ந்த அல்மேத் அல் கட்டாணி என்ற முதியவருக்கு திருமணம் செய்வதற்கு போதிய உடல் ஆரோக்கியம் உள்ளதாக வைத்தியர்கள் சான்றிதழ் வழங்கி உள்ளனர்.

அவர் தன்னிலும் அரைவாசி வயதுடைய சிறியப் பெண்ணையே திருமணம் செய்யவுள்ளார்.

தான் வீட்டில் தயாரிக்கப்படும் கோதுமை ரொட்டி, தேன், பால், பேரீச்சம் பழம் ஆகியவற்றை உணவாக உட்கொள்வதே தன் திட ஆரோக்கியத்தின் இரகசியம் என செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ள இவர் ஏற்கனவே இரண்டு தரம் மணம் முடித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. [உ-9]

...நேற்று முன்தினம் உரையாற்றினார்.

★ குஜராத் பூகம்ப மீட்புப் பணியின் போது 100 மணிநேரம் கழிந்த நிலையில் இளைஞர் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

## பாக். பிரஜைகளுக்கு தூக்குத் தண்டனை

(சிங்கப்பூர்)

இரண்டு பாகிஸ்தானியர்களுக்கு அண்மையில் சிங்கப்பூரில் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது.

இரண்டு பாகிஸ்தானியர்களுக்கும், 5 கிலோ கிராம் எடையுள்ள ஹெரோயினை கடத்திக்கொண்டு வந்ததற்காகவே இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்க சிங்கப்பூர் அதிகாரிகள் இவர்களிடம் போதைப்பொருட்களை வாங்குவது போல நடித்தே இவர்களை கைது செய்துள்ளதாக தெரியவந்துள்ளது (உ-9)

## ஈராக்கின் பணத்தை ஐ. நா. சூறையாடியதாம்

(பாக்தாத்)

தமக்கு சொந்தமான சுமார் 100 கோடி டொலரை சூறையாடி உள்ளதாக ஈராக் ஐ நா மீது குற்றம் சாட்டி உள்ளது.

ஈராக் வெளியுறவு அமைச்சர் முஹம்மத் சஈத் அல்சஹப், ஐ நா செயலாளர் நாயகம் கொபி அனானுக்கு எழுதிய கடிதத்திலேயே இக்குற்றச்சாட்டினைச் சுமத்தியுள்ளார்.

ஈராக்கின் இப்பணத்தினை ஐ நா ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கவும், அவர்களின் அலுவலகத்திற்கு தேவையான நவீன தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கும், ஐ நா அதிகாரிகள் விமானங்களில் முதலாம் வகுப்பில் பயணம் செய்யவும் பயன்படுத்தப்படுகிறது என சஹப்குற்றம்சாட்டிஉள்ளார். [உ-9]

## பயங்கரவாத தடைச்சட்டம்

(லண்டன்)

பயங்கரவாத அமைப்புக்களை தடை செய்வதற்கான தடைச் சட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதிக்கு முன்பாகவே பிரித்தானியாவில் அமுலுக்கு வரும்என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இதற்குமுன்னர்வெளியான செய்திகளின் படி பெப்ரவரி 18 ஆம் திகதிக்கு பின்னரே பயங்கரவாத தடைச் சட்டம் வெளியாகும என அறியவந்தது குறிப்பிடத்தக்கது. (உ-5)

## பெண்ணுக்கு சிரமம் கொடுத்த இந்தியருக்கு சிறைத்தண்டனை

(சிங்கப்பூர்)

27 வயதுடைய கணனிப் பொறியியலாளரான இந்தியர், விமானத்தில் பெண் ஒருவருக்கு சிரமத்தை ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்டமைக்காக சிங்கப்பூரில் 3 பிரம்படித் தண்டனைக்கும் ஒரு ஆண்டு சிறைத்தண்டனைக்கும் உள்ளாகி உள்ளார்.

பிரஸ்தாப பெண் விமானச் சிப்பந்திகளிடம் புகார் தெரிவித்ததை அடுத்தே, இந்தியரான வருப்தாஸ்என்பவருக்கு சிங்கப்பூர் நீதிமன்றத்தில் இத்தண்டனை நிறைவேற்றப்பட்டது.

மேற்படி இந்தியர், தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து மேன் முறையீடு செய்திருப்பதாக தெரிய வருகிறது (உ-9)

## அமெரிக்காவின் நடவடிக்கை குறித்து ஐரோ. தலைவர்கள் அதிருப்தி

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் தேசிய ஏவுகணைப் பாதுகாப்பு திட்டம் குறித்து ஐரோப்பிய தலைவர்கள் வெளிப்படையாக தமது அதிருப்தியினைத் தெரிவித்துள்ளதுடன்,

இது குறித்து ஐரோப்பியத் தலைவர்கள் கருத்தி...

இது தொடர்பாக இத்தாலிய பிரதமர் கியுலியானோ சுமட்டோவும் ஐரோப்பிய ஒன்றிய பாதுகாப்பு விவகாரத்தை கையாளும் விதத்தை அமெரிக்காவின் ஏவுகணை பாதுகாப்பு திட்டம் பாதிக்கும் என எச்சரித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ருபோஸ் ஸ்கார்பிங்கிற்கும் ரஷ்ய அதிகாரிகளுக்கும் இடையில் மாஸ்கோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இப்பிரச்சினை குறித்து ஆராயப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கையர்; அறிவிப்பு துறையில் சாதனை

ஒரு ஆண்டு சிறந்த...
னைக்கும் உள்ளாகி உள்ளார்.

பிரஸ்தாப பெண் விமானச்

எதிர்த்து மேன் முறையீடு செய்திருப்பதாக தெரிய வருகிறது (உ-9)

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் தேசிய ஏவுகணைப் பாதுகாப்பு திட்டம் குறித்து ஐரோப்பிய தலைவர்கள் வெளிப்படையாக தமது அதிருப்தியினைத் தெரிவித்துள்ளதுடன்,

இது குறித்து ஐரோப்பியத் தலைவர்களுக்கிடையே பேச்சுவார்த்தைகளும் இடம் பெறவுள்ளன.

அண்மையில் பிரான்ஸ் ஜனாதிபதி ஜக்சிராக் இது தொடர்பாக தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்

அமெரிக்காவின் தேசிய ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டம் சர்வதேச அளவில் ஆயுதப் போட்டிக்கு வழி வகுக்கும் என அவர் எச்சரித்துள்ளதோடு எற்கனவே பாதுகாப்பு செலவு மிக மோசமாக இருக்கின்ற நிலையில் அமெரிக்காவின் தேசிய ஏவுகணை பாதுகாப்பு திட்டத்திற்கு. பெருமளவு நிதி செலவாகும் எனவும் சுட்டிக் காட்டி உள்ளார்.

இது தொடர்பாக இத்தாலிய பிரதமர் கியுலியானோ சுமட்டோவும் ஐரோப்பிய ஒன்றிய பாதுகாப்பு விவகாரத்தை கையாளும் விதத்தை அமெரிக்காவின் ஏவுகணை பாதுகாப்பு திட்டம் பாதிக்கும் என எச்சரித்துள்ளார்

இதேவேளை ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் ருபோஸ் ஸ்கார்பிங்கிற்கும் ரஷ்ய அதிகாரிகளுக்கும் இடையில் மாஸ்கோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இப்பிரச்சினை குறித்து ஆராயப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (உ-9)

# இலங்கையர்; அறிவிப்பு துறையில் சாதனை

(சிட்னி)

தொடர்ச்சியாக பல மணி நேரம் வானொலி அறிவிப்பு செய்ததன் மூலம் இலங்கைத் தமிழர்கள் இருவர் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் பதிவாகும் தகுதியைப் பெற்றுள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் பல கின்னஸ் சாதனைகளைப் புரிந்த சுரேஸ் ஜோக்கிம்,மற்றும் அவுஸ்திரேலிய இன்பத்தமிழ் வானொலியின் நிர்வாகப் பணிப்பாளரான பாலசிங்கம் பிரபாகரன் ஆகியோரே தொடர்ச்சியாக 85 மணித்தியாலங்கள் அறிவிப்பு செய்து உலக சாதனை புரிந்துள்ளனர்.

இங்கிலாந்து நாட்டவரான கிறேக்டன்னஸ் என்பவர் கடந்த ஆண்டு நிகழ்த்திய 73 மணி 33 நிமிட வானொலி அறிவிப்பு சாதனையை இலங்கையர் இருவரும் கடந்த 28 ஆம் திகதி முறியடித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ-9)

# டியர் ஜென்டில் மேன் என பெண்களை விளித்த அமெரிக்க புதிய அதிபர்

அமெரிக்காவின்புதிய ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யுபுஷ் பெயரை வைத்துக் குறிப்பிட்ட நபர்ஆணாபெண்ணா என்பதை ஊகித்து அறிய முடியாமல் பெண்களுக்கு டியர் ஜென்டில்மேன் என விளித்துக் கடிதம் எழுதினார் என்று தெரிய வந்துள்ளது.

ஐநாவின் சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் குறித்த விசேட ஆணையாளர் அஸ்மா ஜஹாங்கீருக்கும் இலங்கையின் பிரபல. மனித உரிமைப் பணிப்பாளரான ரர்திகா குமாரசாமிக்கும் கடிதம் எழுதும் போதே இவ்வாறு விளித்து எழுதப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, புஷ்தேர்தல் பிரசார காலத்தில் உலகின் கண்டங்களை சரியாக குறிப்பிடமுடியாது திணறியமை இந்தியப்பிரதமர் யார் என சரியாக கூறமுடியாது திணறியமை போன்ற பல வேடிக்கையான சம்பவங்கள் நிகழ்ந்துள்ளமை தெரிந்ததே. [உ-9]

# ஓய்வூதிய திட்டம்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் வேலை பார்க்கும் உள் நாட்டவர்களுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் ஓய்வூதியத்தைப் பெறும் திட்டத்தை அரசு அறிவித்துள்ளது

ஓய்வூதியத் திட்டத்துக்கு உரியவர்கள என்று கருதப்படுபவர்கள் வேலை செய்யும் பொழுதே ஒரு தொகை பணத்தை மாதாந்தம் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டும். (து)

# மாணவர் மத்தியில் டெங்கு விழிப்புணர்வு

[வட்டுக்கோட்டை]

வட்டுக் கோட்டை பகுதியில் டெங்கு காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மிகவும் எழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில், சுகாதாரப் பகுதியினரால் வட்டுக் கோட்டை பகுதிப் பாடசாலைகளில் கடந்த வியாழனன்று டெங்கு விழிப்புணர்வு திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டன.

அத்துடன் மாணவர் மத்தியில் நோய்கள் தொடர்பான விளக்க கருத்துரைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனை பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் மானிப்பாய் சுகாதார வைத்திய பணிமனை ஆகியன இணைந்து முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-24)

# சங்கானைப் பகுதியில் விசர்நாய்த் தொல்லை

(சங்கானை)

சங்கானைச் சந்தையை அண்டிய பகுதிகளில் விசர் நாய்களின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகவும், இதனால் அப் பகுதிகளால் போக்குவரத்து செய்ய பொது மக்கள் அச்சம் கொண்டிருப்பதாகவும்தெரியவந்துள்ளது

நேற்று முன்தினம் மேற்படி பகுதியில் விசர்நாய் ஒன்று வீதியால் போவோர் வருவோரை துரத்தியதாகவும் இதனையடுத்து பொதுமக்கள் அந்நாயை துரத்திப்பிடித்து அடித்துக் கொன்றதாகவும் தெரியவந்துள்ளது.

இதேசமயம்,கடந்த சில தினங்களுக்கு முன்னரும் இவ்வாறான இரு நாய்கள் அடித்துக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-ப-16)

என்னவென்பதை ஆட்சிப் பீடங்களில் இருந்தபேரினவாதிகள் ஒரு சுணமேனும் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

1948ல் பிரித்தானிய ஆட்சியாளர்கள் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கினார்கள் என்பதைவிட சிங்களவர்களுக்கு சுதந்திரத்தையும் தமிழர்களுக்கு அடிமை வாழ்வையும் வழங்கிச் சென்றார்கள் என்பதே உண்மையாகும்.

வடபுலத்து வன்னிப் பிராந்தியத்தில் மக்கள் உயிர்வாழ்விற்கு தேவையான உணவு மற்றும் மருந்துப் பொருட்களுக்காகஏங்கித்தவிக்க -தென்மராட்சி மக்கள் தம்மிடம் இழந்து சொந்த மண்ணிலேயே அகதியாக வாழ தென்னிலங்கையில் சுதந்திரதினம் கொண்டாடப்படுகிறதனில் அது யாருக்காக என்பதை சர்வதேசம் ஒருகணம் சிந்திப்பது மனிதநேயத்தை உயிர்வாழ வைப்பதற்கு தேவையான தொன்றாகும்.

கடந்த 53வருடங்களாக தமிழ்மக்கள் சிறுபான்மையினர் என்ற கோதாவில் காலத்திற்குக் காலம் சிங்கள இனத்தால் தாக்கப்பட்டும், கொல்லப்பட்டும் வந்துள்ளனர்.

ஓர் மொழியென்றால் இரு நாடு இரு மொழியென்றால் ஒருநாடு என்ற

மாணவர்கட்டு ஓர்உந்து சக்தியாகவும் சூழல் பற்றிய விழிப்புணர்வைத் தூண்டும் வழிகாட்டியாகவும் ஆசிரியர் பொ.அமிர்தலிங்கம் அவர்க

களுக்குள் உள்ளடக்கி தெளிவாக எடுத்தியம்ப ஆசிரியர் மேற்கொண்ட யுக்திகள் வரவேற்கத்தக்கவை. நான்காவது இயலில் ஓசோன் பட

சுரண்டப்பட்டவேளையில் அந்நாடுகளின் எதிர் காலம் பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை எனவும், அதிலிருந்தும் இந்நாடுகள் விடுபட்ட

விரிவுரையாளர் கலாநிதி இராஜேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளமை இந்நூலின் கனதியை மேம்படுத்தும் என்பது திண்ணம்.

# பண்பாடும், பகுத்தறிவும் செழித்திடப் பெரும் பங்காற்றிய பேரறிஞர் 'அண்ணா'

பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிவுலக மேதையாகத் திகழ்ந்தவர். அரசியலில் விடிவெள்ளியாக விளங்கியவர். பகுத்தறிவுப் பகலவன், தந்தை பெரியாரின் தன்மானத்தளபதியாகப் பீடுநடைபோட்டவர் நடிக வேந்த; என்று நல்லறிஞர்களால் போற்றப் பட்டவர் கலையுலகக் காவலர் என்று கற்றறிந்தோரால் ஏத்தப்பட்டவர் திரையுலகில் திருப்புமுனையை உண்டாக்கியவர் என்று திக்கெல்லாம் பாராட்டப் பட்டவர்.

மாணவர்தம் எதிர்காலம் ஏற்றம் பெறவேண்டுமென எண்ணி, அதற்கான வழிமுறைகளை எழுத்தாலும் பேச்சாலும் எடுத்து விளக்கியவர் அண்ணா:

### மக்கள் சேவையே மகேஸ்வரன் பூசை

இந்த உலகத்திலே, தானே முயன்று, இன்ப நல்வாழ்வைத் தேடிக் கொள்வது தான்'' முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும்'' என்ற வள்ளுவர் வாக்கினைத் தனது மூலமந்திரமாகக் கொண்டு

டப் பெற்ற சிலுவையையும் எங்கும் எதிர்பார்க்க முடியாது. கிறீத்தவர்கள் கையில் வைரம் கிடைத்தால் அது கல்லூரிகளாக மருத்துவ மனைகளாக மாறி இருக்கும்- மிளிர்ந்திருக்கும். இங்குள்ள மருத்துவ மனைகளில் மாற்ற முடியாத நோய் என்றால் வேலூரில் இருக்கும் மருத்துவ மனைக்கு நோயாளி கொண்டு செல்லப் படுகிறார். வேலூரிலுள்ள

கல்விச் சாலைகளில் ஆசிரியர்களை வேண்டினார்.

### பட்டதாரிகள் பண்பாடு பேணல்

மனிதனை மனிதனாக்க மனிதனிடமிருந்து மனிதத் தன்மையைப் பிரிக்க, மக்களிடத்திலே மனவளத்தை உண்டாக்க மாணவர்கள் பாடுபட வேண்டும். மூட நம்பிக்கையுள்ள மக்களைத் திருத்த

**அ. பொ. செல்லையா**

**மீசாலை**

அமெரிக்கன் நிறுவன கிறீஸ்துவ மருத்துவ மனையிலே இங்கே கைவிடப்பட்ட நேயாளியின் நோயினை நன்கு ஆராய்ந்து, மருத்துவம் செய்து, பிணிகளைந்து உடல் நலத்தோடு அனுப்பும் பொழுது, அவர்கள் கையிலே விவிலிய நூலையும் தந்து அனுப்புவதைக் காண்கிறோம். இதைப்போல நமது பக்தர்களும் மக்களுக்கு நன்மை புரிந்து, பகவத் கீதையையும் தந்து அனுப்

மருத்துவவியல் பொறியியல் அறிவியல்- கலையியல் பட்டதாரிகளால் முடியாது. பட்டத்திற்கும் பகுத்தறிவுக்கும் தொடர்பு வேண்டும்; பட்டம் பெற்றவர்கள் எல்லாம் பகுத்தறிவாளர்களல்ல; அவர்கள் எடுத்துக் கொண்ட துறையிற்தான் பட்டம் பெற்றுள்ளனர். பகுத்தறிவு-பண்பாடு அவர்களும் பெற்றுக் கொள்ள வேண்டும் என

விரும்பினார் அண்ணா.

### எழுச்சிக்கு வழி சமைத்தார்

உரிமைப் போர்ப்படையின் ஈட்டி முனைகளானமாணவர்கள் எல்லோரும் சேர்ந்து அறிவு மழை பொழிய வேண்டும். நாட்டின் உயிர் நரம்புகளான மாணவர்கள் செயலிலே வெற்றி பெற, இடைவிடாது பகுத்தறிவுச் சிந்தனைகளோடு விளங்க வேண்டும். அறிவுக் கொவ்வாத இயற்கைக்குப் பொருந்தாத மனித நேயத்திற்கு மாறான எவை என்றாலும் அவற்றை அகற்றிட அஞ்சாமல் செயற்பட வேண்டும். தன்னலங் கருதாத, சமுதாய முன்னேற்றத்திற்கு இழைத்திடும் ஆர்வமுள்ள மாணவன் சமுதாயத்தால்- இளைஞர் தலைமுறையால் தன்மானமுள்ள தலைமுறைஒன்று உருவாகி பண்டைத் தண்டமிழர்பெருமையினை நிலை நாட்டிடும்துள்ளும்பள்ளிப் பருவ மாணவமணிகள்எழுச்சி பெறவேண்டி அதற்காகத் தனது சொல்லாற்றலைப் பயன்படுத்தினார் அண்ணா.

காலத்திற்குக் காலம் சிங்கள இனத்தால் தாக்கப்பட்டும், கொல்லப்பட்டும் வந்துள்ளனர்.

ஓர் மொழியென்றால் இரு நாடு இரு மொழியென்றால் ஒருநாடு என்று கொல்வின் சில்வா கூறிய காலத்திலிருந்து இன்று வரை தமிழ் மக்கள்மீட்சி பெறவில்லை.

அண்டை நாடான பாரதத்தின்சுதந்திரத்தை அனைத்து இன மக்களும் ஆரவாரத்துடன் கொண்டாட மூவின மக்களைக் கொண்ட இலங்கை தனது சிறிய எல்லைப் பரப்பு முழுமைக்குள்ளும் சுதந்திரத்தை நினைவு கூரமுடியவில்லையெனில் ஆளும் இனம் அடிமைப்படுத்தும் போக்குடைய தென்பதை சொல்லாமலே புரிந்து கொள்ள முடியும்.

எனவே இலங்கையில் என்று எல்லா மக்களும் சுதந்திரக்காற்றை உரிமையோடு சுவாசிக்க முடிகிறதோ அன்றுதான் எல்லோர்க்கும் சுதந்திரதினம் அதுவரை சிங்களத்திற்கு சுதந்திரவாழ்வு 53 ஆண்டுகள், தமிழுக்கு அடிமை வாழ்வு 53 ஆண்டுகள் என்றே கணக்குப்போட முடியும்'

## மகேசுவர பூசை

இந்த உலகத்திலே, தானே முயன்று, இன்ப நல்வாழ்வைத் தேடிக் கொள்வது தான்'' முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும்'' என்ற வள்ளுவர் வாக்கினைத் தனது மூலமந்திரமாகக் கொண்டு, மறுவாழ்வு இன்பம் என்பது இவ்வுலக வாழ்வின் எச்சமெனக் கொண்டு, காயமே இது மெய்யடா என அழுத்திக் கற்பனையாகிய மாறுவுலகத்தின் நன்மைகளைத் தேடுவதை விடுத்து, இவ்வுலக வாழ்வின் இன்பத்தை வலியுறுத்தி, மக்கள் பணியே மகேசுர பூசை என வழி காட்டினார்.

இதற்கு, யேசுநாதர், தமசீடர்களுக்குச் சொன்னதை எடுத்துக் காட்டினர். ''ஊசியின் காதிற்குள்ளே ஒட்டகத்தை நுழைத்தாலும் நுழைத்து விடலாம்; பணக்காரன் பரமண்டலத்திற்குப் போவதென்பது முடியாது'' என்று.

## பகவந்கீதை தந்தால்என்ன?

மேலும் அவர், ''அரசர்களும் அரசிளங்குமரிகளும் நல்ல போக போக்கியத்திலே இருந்துள்ளார்கள், காஞ்சிக் கோயில்களிலே முப்பது நூறாயிரம் ரூபாய்கள் பொறுமான பொன், வைரம், நவரத்தினங்கள்— இவற்றாலான நகைகள் இருக்கின்றன, இதைப்போன்று நவரத்தினங்களாலான சிலுவைகள் இல்லை; பொன்னாலான யேசுநாதரைப்பார்க்க முடியாது. வைரத்தால் தீட் உடல் நலத்தோடு அனுப்பும் பொழுது, அவர்கள் கையிலே விவிலிய நூலையும் தந்து அனுப்புவதைக் காண்கிறோம். இதைப்போல நமது பக்தர்களும் மக்களுக்கு நன்மை புரிந்து, பகவத்கீதையையும் தந்து அனுப்பக் கூடாதா? என வினவினார் அண்ணா.

## கலங்கரை விளக்கு

ஏன்? எதற்கு? எப்படி? என கேட்டு மாணவர்கள் ஆய்வுக் ரீதியாகக் கல்வி பயில வேண்டும். தான் கற்றதை மாணவர்களிடம் சொல்லி, அதனை அவர்கள் நெட்டுருப் போட்டு அவர்களிடமிருந்து அவற்றைத் திருப்பிப் பெற்றிட முயற்சிக்கும் வினா விடை ஆசிரியர்கள் போலில்லாது, பாடமாக்கிடும் மாணவர் யார், புத்திக் கூர்மையான மாணவன்யார், ஆற்றல் வாய்ந்த மாணவன் யார் எனக் கண்டு பிடிக்கும் நிலையில்லாது ஆசிரியர்கள் பகுத்தறிவுள்ள மாணவர்களை ஆக்கி, அவர்களுக்குத் தொழில் வளம் காட்டி, பண்பாட்டியலைப் பெருக்கி நாட்டிற் கோர் நற்பிரசையை உருவாக்கி, சமூகத்தில் அவர்கள் இன்பமாக வாழ்ந்திட ஆசிரியர்கள் முயற்சிக்க வேண்டும். ஆசிரியர்கள் நடமாடும் பல்கலைக்கழகமாதத் திகழ வேண்டும். ஆசிரியர்கள் எதிர் காலச் சமூகத்தின் வழிகாட்டிகள். மாணவ சமுதாயத்தின் கலங்கரை விளக்கு எனவே நல்லாசிரியர்களால் நல்ல சமுதாயம் உருவாக்கப்படல் வேண்டுமெனக் பகுத்தறிவாளர்களல்ல; அவர்கள் எடுத்துக் கொண்ட துறையிற்தான் பட்டம் பெற்றுள்ளனர். பகுத்தறிவு-பண்பாடு அவர்களும் பெற்றுக் கொள்ள வேண்டும் என யினை நிலை நாட்டிடும்துள்ளும்பள்ளிப் பருவ மாணவமணிகள்எழுச்சி பெறவேண்டி அதற்காகத் தனது சொல்லாற்றலைப் பயன்படுத்தினார் அண்ணா.

---

## மெய்வல்லுநர் போட்டி

(சங்கானை)

யா/ சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலை வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி 6 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பி. ப. 1.45 மணிக்கு அதிபர் வே.கு. ஜெகதீசன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க. தனபாலசிங்கம், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம், கௌரவ விருந்தினராகவலிகாமம்வலய தொழில்நுட்ப உத்தியோகத்தர் பா. தியோஜினஸ் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

(உ-ப-16)

## மஹோற்சவம்

[யாழ்ப்பாணம்]

யாழ். நகர பேருந்து நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள அருள்மிகு ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம் பெறவுள்ளது.

(உ-104)

## கிரிக்கெட்

### சுற்றுப் போட்டி

(இணுவில்)

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெற் சுற்றுப் போட்டி இன்றும் நாளையும் காலை 8.30 மணி தொடக்கம் இணுவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 16 கழகங்கள் போட்டியிட உள்ளன.

(உ-49)

## சாப விமோசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைவட்டம் நடத்தி வரும் முதுசம் தொடரில், இன்று பி.ப 3 மணிக்கு கொக்குவில் கலாபவனத்தினர் வழங்கும் ''சாபவிமோசனம்'' நாட்டிய நாடகம் கைலாசபதி கலை அரங்கில் அரங்கேறவுள்ளது.

(உ-104)

## இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண அரிசி தரமானதென்பதை பிரதேச செயலர்கள் உறுதிப்படுத்த வேண்டும்

(யாழ்ப்பாணம்)
இடம் பெயர்ந்தோருக்கான நிவாரண அரிசி விநியோகத்தின் போது புனர் வாழ்வு உணவுக் களஞ்சியங்களில் இருந்து தரமான அரிசியைப் பெற்று விநியோகிப்பதை அவ்வப் பகுதி பிரதேச செயலர்கள் உறுதிப்படுத்தவேண்டுமென்று யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

யாழ். செயலகத்தில் நேற்று நண்பகல் நடைபெற்ற இக் கூட்டத்தில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், மற்றும் திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில்,

★ தற்போது உணவுக்களஞ்சியங்களில் உள்ள மனித பாவனைக்குதவாத அரிசியை அழித்துவிடுவதெனவும்,

★ களஞ்சியத்தில் உள்ள அரிசியை அரிசி குற்றும் ஆலையில் கொடுத்து தவிடு நீக்கி விற்பனைக்கு விடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது:

இதேவேளை தற்போது நிவாரணத்துக்கு வழங்கப்படும் அரிசியைத்தரமான தாக வழங்கமுடியாது போனால் அதற்குப் பதிலாகப் பணமாக வழங்குவது தொடர்பாகவும்,

நாட்டரிசிக்குப் பதிலாக மிச்சாட், வெள்ளைப் பச்சை அரிசி என்பவற்றைத் தருவித்து வழங்குவது தொடர்பாகவும் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

நிவாரண விநியோகத்திற்காக சங்கங்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை பொருளாகவன்றி பணமாக வழங்கவும் நடவடிக்கை எடுப்பதாக அரச அதிபர் உறுதி அளித்தார். (வ)

## கைதடிப் பகுதியில் மக்கள் குடியேற முடியாத நிலையில்சங்கம்திறப்பதா?

(யாழ்ப்பாணம்)
தென்மராட்சியில் கைதடிப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர முடியாத சூழ் நிலை இருக்கும் போது கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை அங்கு மீளஆரம்பிப்பதில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. இவ்வாறு கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.சுப்பிரமணியம் இராணுவத்தினரின் கலந்துரையாடல் ஒன்றின் போது குறிப்பிட்டுள்ளார்.

வரணி மகா வித்தியாலயத்தில் இடம் பெற்ற இக் கருத்தரங்கில் அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது;

தற்போது கைதடிப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர முடியாத சூழ் நிலையே காணப்படுகிறது. அப் பகுதியில் உள்ள கூட்டுறவுச் சங்கக் கிளைகள் யாவும் பொருட்கள் சூறையாடப்பட்டு உடைக்கப்பட்ட நிலையில் எப்படி சங்கக் கிளைகளைத் திறக்க முடியும்.

பொருட்களை ஏற்றி இறக்குவதற்கு சங்கத்திடம் தற்போது லொறியும் இல்லை; இந்நிலையில் சங்கத்தை அங்கு மீளவும் உடனடியாக கொண்டு செல்லக் கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை என்றும் தெரிவித்தார். (வ)

### கள்ளநோட்டுக்..

பொலிஸார்மேற்கொண்ட தேடுதலின் போது சுமார்ஆறு லட்சம் பெறுமதியான கள்ள நோட்டுக்களும் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

மாணவ மாணவிகளே!

5 மாணவ மாணவிகளுக்கு 1000 ரூபா வீதம்

லாலா சோப், சன்சயின் சோப் மேல் உறைகள் பத்துப்பத்தாக எவ்வளவும் அனுப்பலாம்.

அதில் உங்கள் பெயர் பாடசாலையின் விலாசம் என்பனவற்றை மேலுறைகளுடன் எழுதி அனுப்பவும்;

அதிர்ஷ்டமான ஐந்து மாணவ மாணவிகளுக்கு 1000 ரூபா வீதம் வழங்கப்படும்.

லாலா சோப்
தொழிற்சாலை
அச்சுவேலி
(இ-1941)

ஸ்ரீ செல்வா
(யாழ்ப்பாணம்)
வினித், சாலினி, மம்முட்டி, குஷ்பு நடித்த
வாழ்த்துகிறேன்
10-30 2-30
(ப. நே)
CD பிரதி
புதிய வெளியீடு
(இ-1943)

### வன்னியில்

எங்கு நடந்தது. இதன் போது ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றிய தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஒருதலைப் பட்சமானயுத்த நிறுத்தத்தை அதிகரித்திருக்கும் இவ் வேளையில் இரண்டாவது முறையாக அங்கு விமானத் தாக்குதல்கள் இடம் பெற்றிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (வ)

### யார் தடுத்தாலும்----

பட்டாலும் அத் தடையை மீறி பாதயாத்திரையை மேற்கொள்ளுவோம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற இப் பத்திரிகையாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் கரு ஜெயசூரியா கருத்துத் தெரிவிக்கையில்;

அரசாங்கம் நீதியான தேர்தல் ஆணைக்குழு, சுயாதீன பொதுச்சேவை ஆணைக்குழு, பொலிஸ் சேவைஆணைக்குழு என்பவற்றை அமைப்பது தொடர்பாக சகல அரசியல் கட்சிகளுடனும் நாம் கலந்து பேசியுள்ளோம். இதற்கு அனைத்து கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

ஆனால் அரசாங்கம் பொலிஸ் சேவை ஆணைக்குழு அமைப்பதற்கு மட்டுமே சம்மதித்துள்ளது என்றார்.

இதே வேளை ஐக்கிய தேசியக் கட்சியினால் மேற்கொள்ளப்படவிருக்கும் பாதயாத்திரையை குழப்பும் வகையில் எதையும் செய்யக் கூடாது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கேட்டுள்ளார். (வ)

### பாதுகாப்பு.

களும் மற்றும்வைபவங்களும் நடைபெறவுள்ளன.

இதே வேளை சுதந்திர தினத்தைஒட்டி பாதுகாப்பு நடவடிக்கைகளும் பலப்படுத்தப்பட்டு வருகின்றன இப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பொலிசாரும் இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

எனினும் கடந்த காலங்களில் இடம் பெற்ற சுதந்திர தினத்தின்நிகழ்வுகளின் போது வழங்கப்படும் அளவிற்கு இம் முறை பாதுகாப்பு பலப்படுத்தப்படவில்லை எனவும்,

இதற்கு விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தமே காரணம் எனவும் தெரியவருகிறது. (வ)

### பிரதி

பிரதியமைச்சர் தென்னக்கோன் நவலோக மருத்துவ மனையில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

இக் கொலைச் சம்பவம் தொடர்பாக அவரது மகனையும் பொலிஸார் கைது செய்யவுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

கைது செய்யப்பட்ட பிரதியமைச்சர் இம்மாதம் 15ந் திகதி நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுவார். (ந-5)

## பிறப்புநிறை குறைவு

(வவுனியா)
கடந்த ஆண்டு மல்லாவி மருத்துவ மனையில் பிறந்த ஆயிரத்து 418 குழந்தைகளில் 271 குழந்தைகள் நிறைகுறைவாகப் பிறந்துள்ளதாக. மருத்துவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளது. (ந-5)

## 12வது ஆண்டு நினைவு தினம்

(வடமராட்சி கிழக்கு)
இந்திய அமைதிப்படையினரால் 1989ம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்ட யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் தனபாலசிங்கம் சத்தியேந்திரா, விஞ்ஞான பீட மாணவன் எஸ். ஜெகநாதன் ஆகியோரின் 12வது ஆண்டு நினைவு தினம் நேற்று யாழ்பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. (ந-43)

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறைப் பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட நபர்ஒருவர் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவிடம் புகார் செய்யப் பட்டுள்ளது.

சிவன்புதுவீதி நல்லூரைச் சேர்ந்த உருத்தினபதிஜெய (வயது-28) என்பவரே கடந்தமாதம்31 ம் திகதி இராணுவத் தினரால் கைது செய்யப்பட்டவர்:

இவர் தனதுவலதுகாலை இழந்து ஜெய்பூர் கால் பொருத்தியுள்ளார். என்று இவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர் (வ.12)

## இளைஞர்கள் 6 பேர் கைது

(வவுனியா)
வவுனியா நகரில் நேற்றுப் பிற்பகல்படையினர் நடத்திய சுற்றி வளைப்பு தேடுதலின் போது வவுனியா குருமன் காட்டுப் பகுதியைச் சேர்ந்த ஆறு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ந-5)

மங்கையர் மனங்களைக் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள
நியூ நகுலா ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
[இ-1453]

## வர்த்தகதுறை மாணவர்கள் மொழி ஊடகம் அறிந்து விண்ணப்பிக்குக

(யாழ்ப்பாணம்)
யாழ். பல்கலைக்கழகத்தில் 1998/99ம் கல்வியாண்டிலிருந்து வணிகத்துறைகற்கை நெறிகள் ஆங்கில மொழியிலேயே நடைபெற்றுவருகிறது.

வணிகத்துறைக்கு தெரிவாகும் மாணவர்கள் முதலாம் வருடத்தில் தமிழ் மொழி மூலமும், ஆங்கில மொழி மூலமும் தமதுகற்கை நெறியை தொடர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இரண்டாம் வருடத்திலிருந்து ஆங்கில மொழியிலேயே கல்வியை தொடர முடியும்.

எனவே 2001/2002 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் இதனைக் கருத்திற் கொண்டு விண்ணப்பிக்குமாறு யாழ், பல்கலைக்கழகத்தின் வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா கேட்டுள்ளார். (ந)

## குப்பைக்குள் மூன்று சிசுக்களின் சடலம்

(கொழும்பு)
கொழும்புகறுவாத் தோட்டப்பகுதியிலுள்ள குப்பை தொட்டியொன்றிலிருந்துவயிறுகிழிக்கப்பட்டநிலையில் மூன்று சிசுக்களின் சடலங்களை பொலிஸார்கண்டெடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் கொழும்பு-7 கிறகறீஸ் வீதியில் உள்ளகுப்பைத் தொட்டியிலிருந்துகுப்பைகளைஅள்ளச் சென்ற நகரசபை ஊழியர்கள் மூன்று சிசுக்களின் சடலங்களைகண்டனர். இதனையடுத்து கறுவாத் தோட்ட பொலிஸார் இச் சடலங்களை மீட்டனர் இம்மூன்று சிசுக்களின் சடலங்களும் நெஞ்சிலிருந்து வயிறு வரை கிழிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது மேலதிக பரிசோதனைக்காக இச்சடலங்கள் கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது; (ந-5)

## ★ நெடுந்தீவு கடலில் அத்துமீறி மீன்பிடிக்கும் இந்தியரைக் கைது செய்க

(யாழ்ப்பாணம்)
நெடுந்தீவுகடல் பிரதேசத்தில் அத்துமீறி மீன்பிடிக்கும் இந்திய மீனவர்கள் மீதுகடற்படையினரின் உதவியுடன் மீன்பிடி இலாகாவினர் நடவடிக்கைஎடுக்க வேண்டும் என்று நெடுந்தீவு பிரதேச சபைத்தலைவர் எ.டயிள்யு. அரியநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்செயலகத்தில் நேற்று நடைபெற்ற அரசதிணைக்களத் தலைவர்க்கான கூட்டத்திலேயே நெடுந்தீவு பிரதேசசபைத் தலைவர் இவ்வாறு வேண்டுகோள்விடுத்துள்ளார். யாழ் அரசஅதிபர் க.சண்முகநாதன் தலைமையில் இக்கூட்டம்நடைபெற்றது.

இந்தியமீனவர்கள் அத்துமீறி றோலர்களில்வந்து மீன்பிடிக்கும்போது அவர்களை கைதுசெய்து இந்தியாவிற்கு அனுப்பிவைத்தால்தான் இந்தியஅதிகாரி இத்கைய அத்துமீறல்கள் பற்றிஉணர்கள்என்றும் அவர் மேலும் எடுத்துக்கூறினார். (வ.12)

## இருமாணவர்கள் கைது உரும்பிராயில் ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)
உரும்பிராய் யோகபுரத்தில் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள்இருவர்உட்பட எட்டுப் பேரையும் விடுதலை செய்யக் கோரி அப்பகுதிமக்கள் நேற்று ஊர்வலம்நடத்தினர்:

நேற்றுக்காலை 8.30 மணியளவில் யோகபுரத்தில்ஒன்று கூடிய சுமார்250பேர் மாணவர்களின் கைதுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பிய வாறுபலாலிவீதியூடாககோப்பாய் பொலிஸ்நிலையத்திற்கு சென்றனர்,

இதேவேளை நேற்றுமுன்தினம் கோப்பாய்பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து15 பவுண் தங்கநகைகளும், உடுபிடவைகளும் களவெடுக்கப்பட்டசம்பவம் தொடர்பாகவே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன; [ந-4]

## மன்னாரில் ம.உ ஆணைக்குழு

(மன்னார்)
மன்னாரில் மனித உரிமை மீறல்கள் அடுத்தடுத்து இடம் பெற்றுவருவதை கட்டுப்படுத்தும் முகமாகமனிதஉரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் 143 சின்னக்கடை என்ற இடத்தில்கடந்த புதன் கிழமை முதல் இவ்வமைப்பு இயங்கி வருகிறது. (வ)

## மெய்வல்லுநர் போட்டி

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை நண்பகல் 1:00 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறும். (ந-4)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்